
வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 10.04.2024 புதன்கிழமை இதழ் : 101 பக்கங்கள் : 12




## ஹைதராபாத் அணியில் வியாஸ்காந்துக்கு இடம்





சென்னை, ஏப். 10

யாழ்ப்பாணத்தை சேர்ந்த விஜயகாந்த் வியாஸ்காந்த் ஐ. பி. எல். அணியான சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்காக நடப்பு ஐ. பி. எல். தொடரில் விளையாட வுள்ளார்.

ஐ. பி. எல். வீரர்கள் ஏலத்தில் இலங்கையின் வனிந்து ஹசரங்கவை ஹைதராபாத் அணி விலைக்கு வாங்கியது. ஆனால், காயம் காரணமாக அவர் தொடரில் பங்கேற்கவில்லை. இந்த நிலையில், அவருக்கு பதிலாகவே இடதுகை சுழல் பந்துவீச்சாளர் வியாஸ்காந்தை ஹைதராபாத் அணி தெரிவு

11

# அரச தயவில் வாழ்வதால் சம்பந்தன் தமிழ் பொது வேட்பாளருக்கு எதிர்ப்பு



## விக்னேஸ்வரன் எம். பி. சாடல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

**இரா. சம்பந்தன் தற்போதும் எதிர்க்கட்சி தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் - அரசாங்க பெரும்புள்ளிகளின் தயவிலேயே வாழ்கிறார். சிங்கள வேட்பாளர்களுக்கு கிடைக்கக்கூடிய தமிழரின் வாக்குகள் சிதறிப்போவதை இதனாலேயே அவர் எதிர்க்கிறார் - இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன்.**

அத்துடன், சம்பந்தன் தமிழர்களின் இறந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் கூர்ந்து அவதானித்தாரானால் தமிழரின் எதிர்காலம் பற்றி ஆழமாக சிந்திப்பாரானால் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதை அவர் மனமார வரவேற்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

அவர் அனுப்பி வைத்த மாதாந்த கேள்வி - பதிலிலேயே இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். அதன் முழுவிவரம் வருமாறு,

**கேள்வி:** ஐயா! நீங்கள் மத்திய அரசாங்கம் கொண்டுவரும் சட்டங்கள் பற்றி பாராளுமன்றத்தில் அதிகம் சிரத்தை காட்டுவதில்லை. முன்னர் நீதித்துறை செயலாற்றுத் துறை சார்ந்தவராக இருந்து இன்று நீங்கள் சட்ட இயற்றுநராக இருக்கின்ற படியால் அரசாங்கத்துக்கும் நாட்டு மக்களுக்கும் நீங்கள் முன்னணியில் நின்று உதவிபுரிய வேண்டும் அல்லவா? அவ்வாறு செய்வதில்லை ஏன்?

**பதில்:** வெற்றிகரமான வாழ்க்கை வாழ்ந்துவிட்டு நாவிருபது வருடங்களுக்குப் பின்னரும் பாராளுமன்றம் செல்ல உத்தேசித்தது பெரும்பான்மையினர் எம்மை

# பொது தமிழ் அரசியல் அபிலாசை எதுவென்று முதலில் முடிவு செய்க

## மனோ கணேசன் எம். பி. தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 10

பொது தமிழ் அரசியல் அபிலாசைகள் என்ன? குறிப்பாக, அது 13 முழுமையான அமுலாக்கமா? 13 “பிளசா”? சமஷ்டியா? வட, கிழக்கு இணைப்பா? இவை குறித்து முதலில் பொது முடிவுக்கு தமிழ் கட்சிகள் வர வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட் டணி தலைவர் மனோ கணேசன்

11

# தமிழ் பொது வேட்பாளர் குறித்த கலந்துரையாடல் இறுதிக்கட்டத்தில்

## ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி

யாழ்ப்பாணம், ஏப். 10

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் போட்டியிடுவது தொடர்பான கலந்துரையாடல் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது என பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் செப்ரெம்பர்

11

# 779 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

கொழும்பு, ஏப். 10

தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு 779 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படவுள்ளது.

அரசமைப்

11

# தமிழ் மக்கள் பிரச்னையில் அவர்களின் தலைவர்களைவிடவும் எமக்கு அக்கறை!

## தேசிய மக்கள் சக்தி சொல்கிறது

யாழ்ப்பாணம், ஏப். 10

தமிழர்களின் தேசிய பிரச்னைகள் தொடர்பில் தமிழ் அரசியல் தலைவர்களைவிட எமக்குக் கரிசனை அதிகம். தமிழ் மக்களின் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் திடமாக உள்ளோம் - இவ்வாறு கூறியுள்ளார் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று அவர்

11

# ரணிலை வேட்பாளராக களமிறக்க முடிவில்லை!

## பொதுஜன பெரமுன அறிவிப்பு

கொழும்பு, ஏப். 10

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்க கட்சி மட்டத்தில் தீர்மானிக்கவில்லை. பொதுஜன பெரமுனவின் வேட்பாளரையே களமிறக்குவோம். வெகுவிரைவில் எமது தீர்மானத்தை அறிவிப்போம் என்று பொதுஜன

11

# ஜனாதிபதி வேட்பாளரின் கட்டுப்பணம் அதிகரிப்பு!

கொழும்பு, ஏப். 10

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் கட்டுப்பணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் வேட்பாளருக்கான கட்டுப்பணம் 26 இலட்சம் ரூபாயாகும். இதேபோன்று சுயேச்சை வேட்பாளருக்கான கட்டுப்பணம் 31 இலட்சம் ரூபாயாகும்.

புதிய திருத்தத்தை ஜனாதிபதி ரணில்

11

# கட்சி குழப்பத்துக்கு மத்தியில் தாய்லாந்து பறந்தார் மைத்திரி

கொழும்பு, ஏப். 10

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று அதிகாலை தாய்லாந்து நோக்கி பயணமாகியுள்ளார். மைத்திரியுடன் மேலும் ஒன்பது பேர் பயணித்துள்ளனர்.

கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பெரும் குழப்ப நிலைக்கு மத்தியில் அவரது இந்தப் பயணம் அமைந்துள்ளது.

சுதந்திரக் கட்சிக்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

11

# விமல், டலஸ், ரொஷான் இணைந்து புதிய இடதுசாரி கூட்டணி உதயம்?

கொழும்பு, ஏப். 10

இடதுசாரி கூட்டணியொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் தெற்கு அரசியலில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, கம்யூனிஸ் கட்சி பிரதிநிதிகள், டலஸ் அழகப்பெரும, ரொஷான் ரணசிங்க உள்ளிட்ட தரப்பினர் இணைந்தே இதற்கான முயற்சியில் இறங்கியுள் ளனர்.

அடுத்த ஜனாதிபதி மற்றும் பொதுத்

11

# இப்படியும் நடக்கிறது

தமிழர் விடுதலைக் கூட்டணி எழுபத்தி ஏழாம் ஆண்டு நடந்த தேர்தலில் தமிழீழத்துக்கான வாக்கெடுப்பாக தேர்தலைச் சந்தித்திருந்தது.

அந்தத் தேர்தலில் மட்டக்களப்பு தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளராக செல்லையா இராசதுரையும் தமிழ் அரசு கட்சியின் வேட்பாளராக கவிஞர் காசி ஆனந்தனும் போட்டியிட்டனர். மாவை சேனாதிராசா, காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன் என்ற மூன்று இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீண்டகாலம் சிறையில் வைக்கப்பட்டு விடுதலையாகியிருந்த காலம் அது. அந்த மூவரும் தமிழர் தேசமெங்கும் எழுச்சிபூர்வமாக வரவேற்கப்பட்டுக் கொண்டிருந்த காலம். அவர்கள் எங்காவது ஒரு கூட்டத்துக்கு வருகிறார்கள் என்றால் அவர்களைக் காண்பதற்காகவும் அவர்களுக்கு இரத்தத் திலகம் இடுவதற்காகவும் இளைஞர்கள் முண்டியடித்த காலம்.

காசி ஆனந்தன் வடக்கு, கிழக்கின் எந்தத் தொகுதியில் போட்டியிட்டாலும் வெற்றி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இரட்டை அங்கத்தவர் தொகுதியான மட்டக்களப்பில் இருவரையும் களம் இறக்குவதென்று கட்சி எதற்காக முடிவெடுத்தது என்பது புரிந்தவர்களுக்குப் புரியும். மட்டக்களப்பின் தன்னிகரில்லா தலைவராக அப்போது இருந்த "சொல்லின் செல்வர்" செ. இராசதுரையுடன் கட்சியின் உயர்மட்டத் தலைவர்களுக்கு சில உரசல்கள் இருந்தது ஒன்றும் இரகசியமானது அல்ல.

மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதி என்றாலும்கூட, அது ஒரு தமிழரும் ஒரு முஸ்லிமும் வெற்றிபெறுவதற்காகவே உருவாக்கப்பட்டது. ஆனால், அந்தத் தொகுதியில் இராசதுரையையும் காசி ஆனந்தனையும் போட்டியிட வைத்தால், காசி ஆனந்தனே வெற்றி பெறுவார் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. நான் மேலே சொன்னதுபோல, சிறையிலிருந்து வெளியே வந்த காசி ஆனந்தன் எந்தத் தொகுதியில் போட்டியிட்டாலும் வெற்றிபெறுவார் என்று நம்பப்பட்ட காலம் அது.

காசி ஆனந்தனை வேட்பாளராக நிறுத்தியபோதிலும் காசி ஆனந்தனுக்கு ஆதரவாக நடக்கும் கூட்டங்களில் யாழ்ப்பாணத்திலிருந்து யாரும் சென்று பேசக்கூடாது என்றும் ஓர் உடன்பாடு எட்டப்பட்டிருந்தது. ஆனால், அதையெல்லாம் கண்டுகொள்ளமாமல் அவருக்கு ஆதரவாகப் பலரும் சென்று பேசிக்கொண்டிருந்தனர். இதனால், மனமுடைந்த இராசதுரை ஒரு கட்டத்தில் அரசியல்மீது வெறுப்படைந்தவராக காணப்பட்டாரென அந்தக் காலத்தில் கூறப்பட்டது.

ஆனாலும் மனம் தளர்ந்துவிடாத இராசதுரை, தனது கடைசி தேர்தல் பிரசாரக் கூட்டத்தை மட்டக்களப்பு வாவியில் நடத்தினார். அந்த வாவிக்குள் மேடைபோட்டு நின்றுகொண்டு அவர் மட்டக்களப்பு மக்களைப் பர்த்துக் கேட்டார், "நான் இப்போது வாவி நடுவில் நிற்பது போலவே எனது அரசியல் வாழ்க்கையிலும் நின்றுகொண்டிருக்கின்றேன். மட்டக்களப்பு மக்களே, நீங்கள் என்ன முடிவை எடுக்கிறீர்களோ அதனை நான் ஏற்றுக்கொள்கின்றேன்" என்றார்.

தேர்தல் முடிவு வந்தபோது பலரும் எதிர்பார்க்காதது போல, காசி ஆனந்தன் தோல்வி அடைய, இராசதுரை வெற்றி பெற்றார். அவர் வெற்றிபெற்ற போதிலும், தமிழ் அரசு கட்சியின் யாழ்ப்பாண தலைமை அவருக்குக் கொடுத்த குடைச்சல் தாங்கமுடியாமல், அவர் அரசுடன் இணைந்து பயணிக்க வேண்டியதாயிற்று அது வேறு சங்கதி.

அண்மையில், தெற்கில் சில அரசியல், சமூக செயல்பாட்டு நண்பர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தபோது, பல்வேறு அரசியல் நிலைப்பாடுகள் பற்றி பலரும் தத்தமது கருத்துகளை சொல்லிக்கொண்டிருந்தனர்.


எந்த எந்தக் கட்சிகள் எப்படி எப்படி வாக்குகளைப் பெறும் என்பது பற்றி ஒருவர் விபரித்துக்கொண்டிருந்தார். தெற்கில் ஒரு கருத்துக்கணிப்பை நடத்திய நிறுவனம் ஒன்றோடு தொடர்புடையவர் அவர் என்பதால், அந்தக் கருத்துக்கணிப்பில் கிடைத்த தகவல்களை வைத்து அவர் கட்சிகளின் தற்போதைய நிலைமைகளை விபரித்துக் கொண்டிருந்தார்.

ஒரு கட்டத்தில் மகிந்த ராஜபக்ஷவின் கட்சி பற்றியும் அவர்களின் கட்சிக்கு தற்போது இருக்கும் மக்கள் செல்வாக்கு பற்றியும் அவர் விபரித்துக் கொண்டிருந்தபோது, அவரை இடைமறித்த மற்றுமொருவர் சொன்னார்,

"மச்சான், இன்று ராஜபக்ஷக்களின் கட்சியின் நிலை எப்படியிருந்தாலும் கடைசியாக தேர்தல் நடக்கின்றபோது, எங்காவது ஒரு கூட்டத்திலேறி மகிந்த ராஜபக்ஷ, "நான் புலிகளின் சவாலை எதிர்கொண்டு உங்களையும் இந்த நாட்டையும் மீட்டெடுத்தேன். ஆனால், நீங்கள் எங்களை எல்லாவற்றையும் விட்டுவிட்டு வீட்டுக்கு போங்கள் என்று சொன்னால், போவதற்கும் தயாராக இருக்கிறேன்..." என்று கண்களில் கண்ணீர் விட்டவாறு ஒரு வார்த்தை சொன்னால் நிலைமை தலைகீழாகிவிடும். அதனை பார்க்கின்றவர்களில் அரைவாசிப்பேர் என்றாலும் தாங்களும் கண்ணீர்விடத் தொடங்கிவிடுவார்கள்" என்றார்.

அந்தச் சிங்கள நண்பர் இதனைச் சொன்னபோதுதான் எனக்கு இராசதுரை வாவியில் நின்று பேசியது நினைவுக்கு வந்தது.!

**- ஊர்க்குருவி.**







யாழ்ப்பாணம் - நாயன்மார்கட்டு அரசகேசரிப் பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழா நேற்று முன்தினம் பக்திபூர்வமாக நடைபெற்றபோது...!

(படங்கள்: ஐ.சிவசாந்தன்)

## மருதடியான் சப்பை ரதம் வெள்ளோட்டம்!



யாழ்ப்பாணம், ஏப். 10

வரலாற்று சிறப்புமிக்க மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் புதிய சப்பைரத வெள்ளோட்டம் நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வெள்ளோட்டம் நடைபெறவுள்ளது.

மருதடி விநாயகர் ஆலய பெருந்திருவிழா தற்போது நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பாடசாலைகளுக்கு இன்று முதல் விடுமுறை!

கொழும்பு, ஏப். 10

பாடசாலைகளில் 2024 ஆம் ஆண்டுக்கான முதல் தவணைக்கான கற்றல் நடவடிக்கைகள் இன்றுடன் நிறைவடைகின்றன என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி 24 ஆம் திகதி முதல் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

அரச பாடசாலைகள், அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் உள்ள தமிழ் - சிங்கள பாடசாலைகளுக்கு இது பொருந்தும்.

# தேங்காய்க்குள் மறைத்து கடத்திய 500 கிலோ பீடி இலைகள் சிக்கின!

சிலாபம், ஏப். 10



கற்பிட்டி பகுதியிலிருந்து நாகவில்லு பகுதிக்கு பீடி இலைகளை சட்ட விரோதமாக கடத்திய நபரொருவர் புத்தளம் பிராந்திய போக்குவரத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் பிராந்திய போக்குவரத்து பொலிஸார் நேற்று பாலாவி பகுதியில் கடமையில் ஈடுப்பட்டிருந்த போது சந்தேகத்திற்கிடமான லொறியை நிறுத்தி சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதன்போது அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக கொண்டு செல்லமுற்பட்ட பீடி இலைகள் தேங்காய்களுக்குள் மறைத்து வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

17 பைகளில் மறைத்து வைக்கப்பட்ட 500 கிலோ பீடி இலைகள் கைப் பற்றப்பட்டன. லொறியின் சாரதியும் கைது செய்யப்பட்டார். பிடிபட்ட பீடி இலைகளின் சந்தை மதிப்பு 30 இலட்சம் ரூபாய்க்கும் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதான நபர் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# மின்சாரம் தாக்கி இளைஞர் மரணம்!

மட்டக்களப்பு, ஏப். 10

தனியாக இரும்பு ஒட்டு வேலையில் ஈடுபட்ட 19 வயது இளைஞர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

மட்டக்களப்பு நகரில் திருமலை வீதியில் இளைஞனின் வீட்டில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் சசிக்குமார் டினேஸ் (வயது 19) என்பவரே உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் தனியாக இருந்து தனது வீட்டில் வெல்டிங் - இரும்பு ஒட்டு வேலைகளை செய்து கொண்டிருந்தபோது இளைஞரை மின்சாரம் தாக்கியது. இதில் அவர் மயக்கமடைந்துள்ளார். உயிரிழந்தவரின் சகோதரி அவரை அயலவர்களின் உதவியுடன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உடற்கூறாய்வு பரிசோதனையின் பின்னர் இளைஞரின் சடலம் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
10.04.2024 புதன்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 28

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சர்வதேச அழுத்தங்களின் எதிர்காலம்

சர்வதேச அழுதங்கள் தொடர்பான நம்பிக்கைகள் கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி விட்டது. இப்போது அதிகம் சர்வதேசம் தொடர்பில் எவரும் பேசுவதில்லை. சர்வதேச அழுத்தங்களுக்கு 2012இல் அமெரிக்கா பிள்ளையார் சுழியிட்டது. அந்தக் காலத்தில் குறித்த பிரேரணை அமெரிக்கப் பிரேரணை என்றே பரவலாக அழைக்கப்பட்டது. பிரேரணை கொண்டுவரப்பட்டபோது அமெரிக்காவில் ஒபாமா நிர்வாகம் இருந்தது.

இறுதி யுத்தத்தின்போது அமெரிக்கா கப்பல்களை அனுப்பி மக்களை காப்பாற்றப்போவதான கதைகள் புனையப்பட்டன. அன்றைய சூழலில் அப்பாவி தமிழ் மக்கள் எந்தளவு முட்டாளாக்கப்பட்டனர் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம். தமிழ்நாட்டு சினிமாவில் நிகழ்வது போன்றுதான் இறுதி யுத்தத்தின் பின்னரான அழுத்தங்களை நோக்கலாம் - அதாவது, மக்கள் கொல்லப்பட்ட பின்னர் - எவ்வாறு கொல்லப்பட்டனர் என்பது தொடர்பில் விசாரிக்க வேண்டும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டும் என்றவாறான பிரேரணைகள் கொண்டுவரப்பட்டன. இவ்வாறான பிரேரணைகள் முன்வைக்கப்பட்ட காலத்தில் சிங்கள கடும்போக்குவாதிகள் அமெரிக்காவுக்கு எதிராகக் குரலெழுப்பினர்.

உண்மையில் அமெரிக்கா, இலங்கைக்கு எதிராக பிரேரணைகளை கொண்டுவருமாறு அழுத்தங்களை பிரயோகிக்கவில்லை. இதுவரை வந்த பிரேரணைகள் எதுவும் இலங்கைக்கு எதிரான பிரேரணைகளுமல்ல. இது ஆரம்பத்தில் இலங்கைக்கு எதிரான பிரேரணை என்றே நோக்கப்பட்டது. இதற்கு அப்போதிருந்த அமெரிக்க தூதுவர் பதிலளித்திருந்தார். "இது இலங்கைக்கு எதிரான பிரேரணை அல்ல - மாறாக இலங்கைமீதான பிரேரணை - எங்களுடைய நாட்டில் இருப்பது போன்று நல்லாட்சி, மனித உரிமைகளை பாதுகாக்கும் கலாசாரம் ஆகியவற்றை இலங்கையிடமிருந்தும் நாம் எதிர்பார்க்கின்றோம்", என்றார்.

ஆனால், யுத்தம் முடிவுற்று பதினான்கு வருடங்களாகிவிட்ட பின்னரும்கூட அமெரிக்காவின் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப இலங்கையின் ஆட்சியாளர்கள் எந்தவொரு முன்னேற்றத்தையும் காண்பிக்கவில்லை - மாறாக, முன்னர் எவ்வாறான கொள்கை நிலைப்பாட்டை அமுல்படுத்தினார்களோ அதனையே வடக்கு, கிழக்கில் அமுல்படுத்தினர் - அமுல்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் சர்வதேச அழுத்தங்கள் தொடர்பான கட்சிகளின் கதைகள் அனைத்தும் புஷ்வாணமாகி விட்டன. ஐ. நா. பாதுகாப்புப் பேரவைக்கு கொண்டு செல்லுதல் சர்வதேச குற்றவியில் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லுதல், சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லுதல் - இப்படியான கதைகள் அனைத்தும் ஓய்ந்துவிட்டது.

ஈழத் தமிழர்களின் பிரச்னைக்கான தீர்வு அடிப்படையில் பிராந்தியமயப்பட்டது. எனவே, ஈழத் தமிழர்களின் அரசியல் எதிர்காலம் தொடர்பில் பிராந்தியத்துக்கு வெளியில் உள்ளவர்களால் எந்தவோர் அதிசயத்தையும் நிகழ்த்திவிட முடியாது. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இதுதான் யதார்த்தம். இந்த யதார்த்ததை உணர்சிவசத்தால் எதிர்த்துப் பேசலாம் ஆனால், இந்த யதார்த்துக்கு வெளியில் ஒரு துரும்பைக்கூட அசைக்க முடியாது. இதன் காரணமாகத்தான் சர்வதேச அழுத்தங்கள் என்பவை கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகவிட்டது.

# தமிழ் பொது வேட்பாளர் யோசனை நடைமுறைச் சாத்தியமற்றது!

## வடக்கு அவைத் தலைவர் சீ. வீ. கே.சிவஞானம்

*யாழ்ப்பாணம், ஏப். 10*

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை போட்டியிட வைக்கும் யோசனை சாத்தியமற்றது என்று வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

நேற்று நல்லூரில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்த வேண்டும் என்பது தொடர்பாக பரவலாக பேசப்பட்டு வருகிறது. இந்த விடயம் சம்பந்தமாக எங்களுடைய கட்சி ஒரு கட்சியாக இன்னமும் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வரவில்லை. ஆனால், தனிப்பட்ட வகையில் என்னைப் பொறுத்தவரையில் இது எவ்வாறாயினும் நடைமுறை சாத்தியமாகாது.

பொது வேட்பாளரை தேடிப் பிடிப்பதற்குள்ளேயே முரண்பாடுகள் பல வந்து சேரும். ஏற்கனவே நிலைமை அப்படித்தான் இருக்கிறது. ஆகவே, என்னுடைய கருத்து என்னவெனில் பேரம்பேச வேண்டிய சூழ்நிலைக்கு ஒற்றுமையாக பலமாக நாங்கள் இருக்க வேண்டும். அந்தப் பலத்தோடு நாங்கள் பேரம் பேசலாம்.

ஆனால், ஒரு பொது வேட்பாளர் என்றால் ஏனைய வேட்பாளர்களோடு நாங்கள் சமநிலையில் நிற்கின்றபோது சில சமயங்களில் எங்களின் பேரம் பேசும் பலம் குறைவாக இருக்கலாம். அல்லது அவர்கள் எங்களோடு பேரம் பேசாமலும் போகலாம்.

இவ்வாறான சூழல்களும் இருப்பதால் பொது வேட்பாளரை தெரிவு செய்வதிலேயே இந்த விடயம் முடங்கி விடும் அல்லது சாத்தியமற்றதாக அமையும். அது பிரதேச வாதங்களுக்கு இடங்கொடுக்கக் கூடிய வாய்ப்பாகவும் அமையும் - என்றும் கூறினார். (ஐ)

# அரச வங்கிகளை மறுசீரமைப்பு செய்ய அமைச்சரவை அனுமதி!

*கொழும்பு, ஏப். 10*

அரச வங்கிகளை மறுசீரமைப்பு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரசுக்கு உரித்தான வங்கி நிறுவனங்களின் ஒட்டுமொத்த நிர்வாகம், இடர் முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு ஆகிய துறைகளில் நிலவும் பலவீனங்களால் கடந்த காலப்பகுதியில் நிலவிய பொருளாதார நெருக்கடி நிலையில் குறித்த வங்கிகள் கடுமையான நெருக்கடிகளுக்கு முகங் கொடுத்திருந்தன.

எனவே, அவ்வாறான சிரமங்கள் மீண்டும் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கில் அந்த வங்கிகளில் மேற்கொள்ள வேண்டிய பல மறுசீரமைப்புகள் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகிய நிறுவனங்களின் உறுப்பினர்களை உள்ளடக்கிய நிபுணர்கள் குழுவால் அடையாளம் காணப்பட்டுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தால் வழங்கப்பட்ட நீடிக்கப்பட்ட நிதி வசதிகள் நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கும் கட்டமைப்பு ரீதியான தேவைப்பாடுகளாகவும் உலக வங்கியால் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி கொள்கை செயல்பாடுகளின் கீழான அடிப்படைச் செயல்பாடுகளாகவும் குறித்த மறுசீரமைப்புகளை துரிதமாக அமுல்படுத்த வேண்டியுள்ளது.

இதற்கமைய குறித்த மறுசீரமைப்பு யோசனைகளை அமுல்படுத்துவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)


# 2,500 ஆங்கில ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கு அனுமதி!

*கொழும்பு, ஏப். 10*

"அனைவருக்கும் ஆங்கிலம்" திட்டத்தின் கீழ் 2 ஆயிரத்து 500 ஆங்கில ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த கூட்டத்தில் உரையாற்றிய அவர், க.பொ.த சாதாரண தர (சா/த) பாடங்களை ஆங்கிலத்தில் கற்பிப்பதற்கு மொத்தம் 4 ஆயிரத்து 441 ஆங்கில ஆசிரியர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 6,500 ஆங்கில ஆசிரியர்கள் தேவை எனவும் தெரிவித்தார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு



ஏப்ரல் - 10 புதன்கிழமை
சோபகிருது வருடம் - பங்குனி 28
நல்ல நேரம் : 09.30 - 11.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : துவிதியை




### மேடம்
ராசிக்குள் சந்திரன் இருப்பதாலும் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

### இடபம்
எளிதாக முடிய வேண்டிய விஷயங்களை பல முறை போராடி முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். நிதானம் தேவைப்படும் நாள்.

### மிதுனம்
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள்.வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உங்கள் திறமை வெளிப்படும். மதிப்புக் கூடும் நாள்.

### கடகம்
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். உத்தியோகத்தில் சிறந்த முடிவுகள் எடுப்பீர்கள். சாதிக்கும் நாள்.

### சிம்மம்
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் நீங்கும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். தொழிலில் லாபம் வரும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நன்மைகள் நடக்கும் நாள்.

### கன்னி
சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களால் பிரச்னைகள் வரும்.

### துலாம்
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும்.சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

### விருட்சிகம்
எதிர்பாராத பணவரவு உண்டு. வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் சில புதுமைகளை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

### தனுசு
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பநட்பால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கனவு நனவாகும் நாள்.

### மகரம்
பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். உழைப்பால் உயரும்.

### கும்பம்
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள்.வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

### மீனம்
கடந்த இரண்டு நாட்களாக கணவன் -மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். மேலதிகாரிகளிடம் மதிப்பு அதிகரிக்கும்.

# இலங்கை தமிழர்களுக்கு நடந்த அநீதிக்கு தி. மு. க. - காங்கிரஸ் கட்சிகளே பொறுப்பு

## பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்

திருவாரூர், ஏப். 10

இலங்கையில் தமிழர்களுக்கு நடந்த அநீதிக்கும் கச்சதீவு இழப்புக்கும் மீனவர் பிரச்னைகளுக்கும் தி. மு. க., காங்கிரஸ் கட்சிகள்தான் பொறுப்பு என்று மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

அத்துடன், காங்கிரஸ் - தி. மு. க. கட்சிகளுக்கு தமிழர் உரிமைகள் குறித்துப் பேசத் தகுதியில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

திருவாரூரில் நடந்த பொதுக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று இந்தியா உலகின் 5ஆவது பெரிய பொருளாதார நாடாகவும் பொருளாதாரம் வேகமாக வளரும் நாடாகவும் மாறியுள்ளது.

மோடி அரசில் இளைஞர்கள் வேலை தேடுபவர்களாக இல்லாமல் வேலை கொடுப்பவர்களாக மாற வேண்டும் என்ற நோக்கத்தில் 1.25 இலட்சம் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன. ஆனாலும், நாட்டின் வளர்ச்சிக்கு காரணமாக உள்ள மோடி குறித்து அவதூறுகளை பரப்பி வருகிறார்கள்.

இலங்கையில் தமிழர்களுக்கு நடந்த அநீதிக்கும் கச்சதீவு இழப்புக்கும் மீனவர் பிரச்னைகளுக்கும் தி. மு. க., காங்கிரஸ் கட்சிகள்தான் பொறுப்பு. இந்த 2 கட்சிகளும் சேர்ந்துதான் இலங்கைக்கு கச்சதீவை பரிசாகக் கொடுத்தன. இதனால் அவர்கள் தமிழர்கள், மீனவர்கள் உரிமை குறித்துப் பேச எந்தத் தகுதியும் இல்லை - என்றார்.

(ஐ)

# சிறுத்தைகள் கட்சி தேர்தல் அறிக்கை!

விழுப்புரம், ஏப். 10

பா. ஜ. க. அரசை வீழ்த்துவதே ஒற்றை இலக்கு என்ற மையக் கருத்துடன் திருமாவளவன் தனது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை நேற்று வெளியிட்டார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் அந்தத் தேர்தல் அறிக்கையில், "தமிழை இந்தியாவின் ஆட்சி மொழி ஆக்குதல், இந்தியாவின் இரண்டாவது தலைநகராக தமிழ்நாடு, தமிழ்நாட்டுக்கென தனிக்கொடி, உயர்நீதிமன்றில் வழக்காடு மொழியாக தமிழ், தமிழ் செம்மொழி வாரக் கொண்டாட்டம் எனப் பல்வேறு உறுதி மொழிகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஐ)

# ஆணவத்தில் பேசுகிறார் பிரதமர் மோடி!

தஞ்சாவூர், ஏப். 10

சமூகத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய திராவிட இயக்கத்தை அழித்து, ஒழித்துவிட்டுதான் மறுவேலை பார்ப்பேன் என பிரதமர் மோடி ஊருக்கு ஊர் பேசி வருகிறார். இது அவரின் ஆணவத்தை காட்டுகிறது - என்று ம. தி. மு. க. தலைவர் வைகோ தெரிவித்துள்ளார்.

பிற மாநிலங்கள் எல்லாம் தமிழ்நாட்டை பின்பற்றுகிற வகையிலான ஆட்சியை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அமைத்துள்ளார். பாடசாலை குழந்தைகள் பசியுடன் இருக்கக்கூடாது என்பதற்காக காலை உணவு திட்டத்தை கொண்டு வந்தார். இதை கனடா பிரதமரும் தன்னுடைய நாட்டில் கொண்டு வந்து பாராட்டுகிறார்.

நம் நாட்டில் எத்தனையோ பிரதமர்கள் ஆட்சி செய்தனர். ஆனால், சமூகத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய திராவிட இயக்கத்தை அழித்து, ஒழித்துவிட்டுதான் மறுவேலை பார்ப்பேன் என பிரதமர் மோடி ஊருக்கு ஊர் பேசி வருகிறார். இது அவரின் ஆணவத்தை காட்டுகிறது. இது பற்றி அவரை நேரில் சந்திக்கும்போது கேட்பேன் - என்றார். (ஐ)

# இலங்கையில் தமிழர்களை கொன்றது காங்கிரஸ் கட்சி!

## நாம் தமிழர் சீமான்

சென்னை, ஏப். 10

இலங்கையில் தமிழர்களை கொன்றது காங்கிரஸ், உடனிருந்தது தி. மு. க., வேடிக்கை பார்த்தது அ. தி. மு. க., பா. ஜ. க. என்று கிருஷ்ணகிரியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

தமிழர்கள் அறம் சார்ந்து வாழ்ந்த மறவர்கள். காவிரியில் ஒரு சொட்டு தண்ணீர் கூட கொடுக்க முடியாது என கர்நாடகாவில் கூறுகிறார்கள். தமிழர்களுக்குத் தண்ணீர் கொடுக்க நாங்கள் என்ன முட்டாள்களா என கேட்கின்றனர். ஒரு நொடி நினைத்து பாருங்கள், காட்டுக்குள் வீரப்பன் இருந்திருந்தால், காவிரியில் ஒரு சொட்டு தண்ணீர் கொடுக்க முடியாது என கூற முடியுமா? ஒகேனக்கல் எங்களுக்கு சொந்தம் என கூற முடியுமா? வரலாற்றை அறிந்து கொண்டால் தமிழர்கள் விழித்துக் கொள்வார்கள் என்பதற்காக, திட்டமிட்டு அழித்தார்கள் -என்று கூறினார்.

(ஐ)

# இயக்குநர் அமீர் வீட்டில் சோதனை

சென்னை, ஏப். 10

போதைப் பொருள் கடத்தல் வழக்கு தொடர்பாக சென்னையில் உள்ள ஜாபர் சாதிக் வீடு, இயக்குநர் அமீர் வீடு, அலுவலகம் உள்பட 30இற்கும் மேற்பட்ட இடங்களில் அமுலாக்கத் துறை அதிகாரிகள் நேற்று சோதனை நடத்தினர்.

முன்னதாக, உணவுப் பொருள் ஏற்றுமதி என்ற பெயரில், இந்தியாவில் இருந்து நியூசிலாந்து, அவுஸ்திரேலியா உட்பட பல்வேறு நாடுகளுக்கு போதைப் பொருள் கடத்திய முறைப்பாட்டில் ஜாபர் சாதிக் கைது செய்யப்பட்டார். அவர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில், தமிழ் திரைப்பட நடிகரும், இயக்குநருமான அமீருக்கு போதைப் பொருள் தடுப்புப் பிரிவு விசாரணை நடத்தி வாக்குமூலங்களை பதிவு செய்தது.

இதைத் தொடர்ந்தே நேற்றைய தினம் 30 இடங்களில் சோதனை நடத்தப்பட்டது.

(ஐ)

# இராமேஸ்வரம் மீனவர்கள்மீது இலங்கை கடற்படை தாக்குதல்

இராமேஸ்வரம், ஏப். 10

இராமேஸ்வரத்தை சேர்ந்த மீனவர்கள் இருவரை இலங்கை கடற்படை தாக்கி காயப்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை கச்சதீவு - நெடுந்தீவு எல்லையில் சுமார் 300இற்கும் மேற்பட்ட படகுகளில் மீனவர்கள் மீன்பிடித்தனர். இதன்போது, 5 படகுகளில் அங்கு வந்த இலங்கை கடற்படை மீனவர்களின் வலைகளை அறுத்ததுடன் அவர்களை அடித்து விரட்டியது.

இதில் மீனவர்கள் இருவர் காயமடைந்தனர். காயமடைந்த இருவரும் இராமேஸ்வரம் அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# புற்று நோயாளர் எண்ணிக்கை யாழ்.மாவட்டத்தில் அதிகரிப்பு!

## வைத்தியர் யமுனானந்தா தகவல்

யாழ்ப்பாணம், ஏப். 10

**யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் 776 பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நிலையில் அவர்களில் 71 பேர் மரணித்துள்ளனர் என யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி யமுனானந்தா தெரிவித்தார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வருபவர்களில் மார்பகப் புற்றுநோய், கருப்பை புற்றுநோய், தூலகப் புற்றுநோய், வாய் புற்றுநோய், சுவாசம் தொண்டை பகுதிகளில் ஏற்படும் புற்றுநோய், உடல் உள் உறுப்புக்களில் ஏற்படும் புற்றுநோய் என பல வகையான புற்று நோய்கள் இனம் காணப்பட்டுள்ளன.

புற்றுநோயை பொறுத்தவரையில் ஆரம்பத்தில் கண்டறிந்து அதற்கான சிகிச்சை முறைகளை ஒழுங்காக மேற்கொள்ளும்போது நோய் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

முப்பது வயதிற்கு மேற்பட்ட பெண்கள் தமது மார்பகங்களை சுய பரிசோதனை செய்வதோடு ஏதேனும் கட்டிகள் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் வைத்தியரை நாட வேண்டும். 40-60 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கு மார்பகங்களில் ஏற்படும் புற்றுநோயை மார்பகங்களில் ஏற்படும் அசாதாரண நிலையை கண்டறியும் மனோகிராம் சிகிச்சை மூலம் கண்டறியலாம். குறித்த சிகிச்சை யாழ் போதனா வைத்திய சாலையில் மேற்கொள்ளப்படுகிறது.

பெண்கள் மாதவிடாய் ஒழுங்கீனம் தொடர்பில் பெண்கள் அவதானமாக இருப்பதோடு கருப்பைக் கட்டி, தூலகப் புற்று நோய் தொடர்பிலும் அவதானமாக இருக்க வேண்டும்.

ஆண்களைப் பொறுத்தவரையில் புகைத்தல் வெற்றிலை போடுதலால் மற்றும் மதுபானம் அருந்துவதால் வாய் மற்றும் ஈரல் புற்று நோய் ஏற்படுகிறது.

யாழ் மாவட்டத்தில் கடந்த 2023 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்க டிசம்பர் வரையான காலப்பகுதியில் குடல் புற்று நோய் காரணமாக 88 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 07 பேர் உயிரிழந்துள்ளனர்.

இரைப்பை புற்று நோயால் 40 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். ஈரல் புற்றுநோயால் 40 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 08 பேர் உயிரிழந்துள்ளனர். சுவாசப் புற்றுநோயினால் 67 பேர் பாதிக்கப்பட நிலையில் 08 பேர் உயிரிழந்துள்ளனர்.

மார்பக புற்று நோயினால் 83 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 04 பேர் உயிரிழந்துள்ளனர். கருப்பைப் புற்று நோயினால் 27 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 03 பேர் உயிரிழந்துள்ளனர். கருப்பை கழுத்து புற்று நோயினால் 48 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 03 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் ஆண்களில் சிறுநீர்ப்பை புற்று நோயினால் 10 பேர் சிகிச்சை பெற்று வரும் நிலையில் குருதிப்புட்டி நோயினால் 37 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஆகவே புற்று நோய் தொடர்பில் ஆண் பெண் இருபாலரும் அறிந்திருக்க வேண்டியது கட்டாயமாக காணப்படுவதுடன் ஆரோக்கியமான உணவு பழக்க வழக்கங்களை கடைப்பிடிப்பதன் மூலம் புற்றுநோயை தடுக்க முடியும்-என்றார்.

(அ)

# பிறக்கும் குழந்தைகள் எண்ணிக்கை குறைவு!

## கல்வி அமைச்சர் தகவல்



கொழும்பு, ஏப். 10

கல்வி அமைச்சின் கூற்றுப்படி, கடந்த பத்து வருடங்களில் பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு சிறுவர்களின் சேர்க்கை சுமார் நாற்பதாயிரம் குறைந்துள்ளது. பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை குறைவடைந்தமையே இந்த நிலைக்கு முக்கிய காரணம் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கல்வி அமைச்சின் தரவுகளை ஆராயும்போது அரசாங்க பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைவடைந்து வருவதையும் தெளிவாகக் காணமுடிகிறது. கல்வி அமைச்சின் தரவுகளின்படி, 2021ஆம் ஆண்டு முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 304105 ஆகும்.

2022 ஆம் ஆண்டில், முதல் வகுப்பில் இணைந்த குழந்தைகளின் எண்ணிக்கை 11,889 குறைந்து 292,216 ஆக இருந்தது.

இதேவேளை குடும்ப சுகாதார பணியகத்தின் தரவுகளின்படி, 2022 ஆம் ஆண்டில், இலங்கையில் 258,235 பேர் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு விண்ணப்பித்திருந்தனர்.

இதில் 30719 பேர் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டனர். இந்த தரவுகளின்படி, மக்கள்தொகை மற்றும் புள்ளி விவர அறிக்கைகளின்படி, புதிதாக திருமணமான தம்பதிகள் கூட குழந்தைகளைப் பெறுவதில் ஆர்வமில்லாமல் இருப்பதாக தெரியவந்துள்ளது-என்றார்.

(அ)

# சிறைச்சாலைகளில் கைதிகளை பார்வையிட விசேட சந்தர்ப்பம்!

கொழும்பு, ஏப். 10

தமிழ் - சிங்களப் புத்தாண்டு மற்றும் ரமழான் பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் 11ஆம், 12ஆம், 13ஆம் திகதிகளில் சிறைக் கைதிகளைப் பார்வையிட விசேட சந்தர்ப்பங்கள் வழங்கப் படவுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் காமினி டீ. திஸாநாயக்க தெரிவித்தார்.

ரமழான் பண்டிகையை முன்னிட்டு சிறையில் உள்ள முஸ்லிம் கைதிகளை மாத்திரம் நாளை வியாழக்கிழமை பார்வையிட சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் காமினி டீ. திஸாநாயக்க குறிப்பிட்டார்.

அதேநேரம், தற்போதுள்ள விதிமுறைகள், முறையான சுகாதார மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு அமைவாக பார்வையிடவரும் நகர் வீட்டிலிருந்து கொண்டு வரும் உணவு, இனிப்புப் பண்டங்கள் மற்றும் சுகாதாரப் பொருட்களை மாத்திரம் கைதிகளுக்கு வழங்குவதற்கு அனைத்துச் சிறைச்சாலைகளிலும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# களஞ்சியங்களில் காணாமல்போன அரிசி குறித்து விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஏப். 10

நிக்கவெரட்டிய, பொல்கஹவெல, மஹவ மற்றும் ஆனமடு ஆகிய அரச அரிசி களஞ்சியசாலைகளில் இருந்து 2022 ஆம் ஆண்டுக்கான 30 இலட்சம் கிலோ அரிசி காணாமல்போனமை தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த முதற்கட்ட விசாரணை அறிக்கை குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும், காணாமல்போன நெல் கையிருப்பின் பெறுமதி ஒரு பில்லியன் ரூபாவை அண்மித்துள்ளதாகவும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் புத்திக இத்தமல்கொட தெரிவித்தார்.

நெல் சந்தைப்படுத்தல் சபையில் கையிருப்புக் காணாமல்போனது தொடர்பில் கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி 4 களஞ்சியசாலைகளில் சுமார் 1000 கோடி பெறுமதியான நெல் இழப்பு ஏற்பட்டமை தொடர்பில் 4 களஞ்சியசாலைகளில் தனித்தனியாக விசாரணை நடத்தப்பட்டு ஆரம்பகட்ட அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை முதல் எதிர்வரும் 17ஆம் திகதி வரை நெல் விற்பனைச் சபை நெல் கொள்வனவுகளை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாகவும், 11ஆம் திகதிக்குள் விவசாயிகளுக்கு கொள்வனவு செய்யப்பட்ட நெல்லுக்கான பணம் வழங்கப்படும் எனவும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் புத்திக இத்தமல்கொட குறிப்பிட்டார்.

(அ)

# மின்சாரத் திருத்த சட்டமூலத்திற்கு அனுமதி வழங்கிய அமைச்சரவை

கொழும்பு, ஏப். 10

மின்சார திருத்தச் சட்டமூலத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த சட்டமூலத்தை இந்த வார வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், இந்த மாத இறுதியில் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் காஞ்சன விஜேசேகர கூறினார்.

குறித்த சட்டமூலத்தை, பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த தினத்தில் இருந்து 2 வாரங்களுக்கு அதனைச் சவாலுக்கு உட்படுத்த பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் அமைச்சர் காஞ்சன கூறினார்.

(அ)

# பள்ளிவாசல்களுக்கு சிறப்புப் பாதுகாப்பு!

கொழும்பு, ஏப். 10

ரமழான் பண்டிகையை முன்னிட்டு பள்ளிவாசல்களுக்கு சிறப்பு பாதுகாப்பு அளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் பணிப்புரைக்கு அமைவாக,குறித்த திட்டம் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளது எனவும், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் குறித்த பாதுகாப்புத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாடளாவிய ரீதியில் உள்ள 2,453 பள்ளிவாசல்களுக்கு சிறப்பு பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான விண்ணப்ப காலம் இன்று வரை நீடிப்பு

கொழும்பு, ஏப். 10

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்ப காலம் இன்று புதன்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் மாணவர்கள், தேசிய கல்வியியற் கல்லூரிக்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கமைய, கடந்த 5 ஆம் திகதி முதல் அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில், நாளை வரை விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன், குறித்த காலப்பகுதிக்குள் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், தமது விண்ணப்பங்களில் திருத்தங்களைச் செய்ய வேண்டுமாயின், எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் 17ஆம் திகதி நள்ளிரவு வரை மாத்திரம் அதற்கான அவகாசம் வழங்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தரமற்ற மருந்தால் 3 பேர் உயிரிழப்பு

## நீதிமன்றில் சட்டத்தரணி தகவல்

கொழும்பு, ஏப். 10

**கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் ஊசி மூலம் மூவர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் நீதிமன்றில் ஆஜராகிய சட்டத்தரணி நளிந்த இந்ததிஸ்ஸ, நேற்று முன் தினம் மாளிகாகந்தை நீதவான் லோச்சனி அபேவிக்ரம முன்னிலையில் தெரிவித்தார்.**

இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி, இலஞ்சம், ஊழல் மற்றும் வீண் விரயத்துக்கு எதிரான பிரஜைகள் அதிகாரம் என்ற அமைப்பு, இந்த உண்மைகளை முன்வைத்ததுடன், இந்த வழக்கு தொடர்பான விவரங்களை பயன்படுத்துமாறு நீதிமன்றத்தை கோரியது.

2023 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 13 ஆம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலையின் 16 ஆம் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த உதய பெரேரா, ஜே. அபேவர்தன மற்றும் அசோக பலிசேன ஆகிய மூவர் மனித இம்யூனோகுளோபுலின் ஊசியை செலுத்தியதைத் தொடர்ந்து கடுமையான ஒவ்வாமை காரணமாக உயிரிழந்ததாக ஜனாதிபதி சட்டத்தரணி நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.


சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம,

மேற்படி அமைப்பினால் குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட ஆவணம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டதுடன், சம்பவம் தொடர்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வைத்தியர்களுடன் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றதாக நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த நோயாளிகளில் ஒருவருக்கு சர்ச்சைக்குரிய ஊசி போடப்பட்டதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றில் தெரிவித்துள்ளார். விரைவில், அவருக்கு ஒவ்வாமை ஏற்பட்டது. மருத்துவர்கள் அவரது உயிரைக் காப்பாற்ற முயன்றனர். ஆனால் முடியவில்லை. உடனடியாக மருந்தை பயன்படுத்துவதை மருத்துவர்கள் விலக்கி வைத்தனர்.

கடந்த விசாரணை திகதியில், இந்திய கடன் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட ரிற்றுக்ஸிமப் மனித இம்யூனோகுளோபுலின் அல்லது புற்றுநோய் எதிர்ப்பு மருந்தின் நிர்வாகத்திற்குப் பிறகு அரசு மருத்துவமனைகளில் இறந்தவர்கள் அல்லது நோய்வாய்ப்பட்டவர்கள் தொடர்பான அறிக்கையை மே 30 க்கு முன் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு சமர்ப்பிக்குமாறு சுகாதார சேவைகள் இயக்குநருக்கு உத்தரவிட்டப்பட்டிருந்தது. இதன்படி, அறிக்கை கிடைத்த பின்னர் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றில் தெரிவித்தார்.

(அ)






# யாழ்.இந்திய துணைத் தூதரகத்தால் இஸ்லாமிய குடும்பங்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஏப். 10

புனித ரம்ழான் பண்டிகையை முன்னிட்டு யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் இஸ்லாமிய குடும்பங்களுக்கு நேற்று உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

யாழ்.கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் 150 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி மற்றும் தூதரக அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

(அ)

# வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரியை தாக்கியவர் கைது!

அம்பாறை, ஏப். 10

அம்பாறை வன பிரேதசத்துக்கு உட்பட்ட உஹன ஆதல் ஓயா கிராமத்தில் சட்டவிரோதமாக இறைச்சி விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற வன ஜீவராசி அதிகாரி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவத்தில் தொடர்புடையவரும் சட்டவிரோதமாக இறைச்சி விற்பனை செய்தவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பெருந்தொகையான இறைச்சியும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறினர்.

# பாதாள உலகக் குழுக்களை சேர்ந்த 16 பேர் கைது!

கொழும்பு, ஏப். 10

நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பாதாள உலக குழுக்களைச் சேர்ந்த 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணம் மற்றும் தென் மாகாணத்தை இலக்கு வைத்து பாதாள உலக செயல்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட 20 பேர் கொண்ட விசேட குழுவினரால் வெள்ளவத்தை, மிட்டியாகொடை, வாழைத்தோட்டம், ரத்கம, கல்கிஸை மற்றும் அங்கொடை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 16 சந்தேக நபர்களில் பாதாள உலக குழுக்களைச் சேர்ந்த 8 பேரும் அவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியதாகக் கூறப்படும் 8 சந்தேக நபர்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் குறித்து இன்று தீர்மானம்

கொழும்பு, ஏப். 10

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதனம் தொடர்பான முக்கிய தீர்மானத்தை மேற்கொள்வதற்காக வேதன நிர்ணய சபை இன்று கூடவுள்ளது.

இதற்கமைய, இன்று முற்பகல் 10 மணிக்கு தேயிலை நிர்ணய சபையும், பிற்பகல் 2 மணிக்கு இறப்பர் நிர்ணயச் சபையும் கூடவுள்ளன.

இதன்போது, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பு தொடர்பான வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

இந்த வாக்கெடுப்பில், முதலாளிமார் சம்மேளனம் சார்பில் 8 உறுப்பினர்களும், தொழிற்சங்கங்கள் சார்பில் 8 உறுப்பினர்களும் வாக்களிக்கவுள்ளனர்.

அதேநேரம், தொழில் அமைச்சின் சார்பாக 3 உறுப்பினர்களும் குறித்த வாக்கெடுப்பின் போது, வாக்களிக்கவுள்ளனர்.

கூட்டு ஒப்பந்தத்தில் இருந்து முதலாளிமார் சம்மேளனம் விலகிய நிலையில், மீள கூட்டு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான எந்தவொரு இணக்கப்பாடும் இதுவரை எட்டப்படவில்லை.

இந்த நிலையில், வேதன நிர்ணய சபையின் ஊடாக கடந்த முறை 1,000 ரூபாய் நாளாந்த வேதனம் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில், இம்முறையும் முதலாளிமார் சம்மேளனத்துடன் பல்வேறு கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட் டிருந்தபோதிலும், அவை தோல்வியில் நிறைவடைந்திருந்தன.

தற்போதைய பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணிகளின் அடிப்படையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த வேதனமாக குறைந்தபட்சம் 1,700 ரூபாயை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், தொழிற்சங்கங்கள் நாளாந்த வேதனமாக 2,000 ரூபாயை முன்மொழிந்துள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை, நாளை இடம்பெறவுள்ள வாக்கெடுப்பில் தொழிற்சங்க தரப்பினரே வெற்றிபெறவுள்ளதாக இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

(அ)

# பெண்ணை துஷ்பிரயோகம் செய்து 50 ஆயிரம் ரூபா பணம் கொள்ளை!

கொழும்பு, ஏப். 10

ஹம்பேகமுவ பொலிஸ் பிரிவுக்கு உபட்ட தஹய்யாகல பிரதேசத்தில் 52 வயது பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்து அவரின் வீட்டிலிருந்து 50 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையடித்து சென்ற நபர் தொடர்பில் ஹம்பேகமுவ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இந்த சம்பவம் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. 52 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்திற் குட்பட்டுள்ளார்.

சம்பவ தினத்துக்கு முன்னைய தினம், பாதிக்கப்பட்ட பெண்ணின் அயல் வீட்டில் நபரொருவர் இந்தப் பெண்ணின் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு, அவரைக் கடுமையான வார்த்தைகளால் திட்டியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் இந்தப் பெண் இரவு உறங்கச் சென்றபோது, வீட்டுக்கு வெளியில் நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டுள்ள நிலையில் அவர் வீட்டின் பின்புறத்தில் உள்ள கதவைத் திறந்து வெளியே பார்த்துக் கொண்டிருந்தபோது, திடீரென வீட்டுக்குள் நுழைந்த சந்தேக நபரொருவர் அவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

சந்தேக நபர் வீட்டிலிருந்த 50 ஆயிரம் ரூபா பணத்தையும் கொன்னையிட்டுச் சென்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர், சஞ்சு என்ற அயல் வீட்டு உரிமையாளர் என அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# மைத்திரியின் நியமனம் சட்டவிரோதமானதே!

## ஒப்புக்கொண்டார் துமிந்த

கொழும்பு, ஏப். 10

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சட்டவிரோதமான முறையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை பதவிக்கு நியமிக்கப்பட்டதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசியல் நிகழ்ச்சியொன்றில் அவர் இந்த விடயத்தை கூறினார்.

தாம் உள்ளிட்ட கட்சியின் சில உறுப்பினர்களினால் தவறுதலாக மைத்திரி தலைமை பதவியில் அமர்த்தப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

கட்சி யாப்பு பற்றிய போதிய தெளிவின்மையால் இந்த தவறு இழைக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் வெளிநபர்கள் சவால் விடுத்ததன் பின்னர் கட்சியின் யாப்பு குறித்து தெளிவு ஏற்பட்டது. சுதந்திரக் கட்சியின் யாப்பினை ஜனநாயகமானதாக திருத்தி அமைக்கும் நோக்கில் புதிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

(அ)

# இலங்கையுடன் இந்தோனேசியா சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

## பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க ஏற்பாடு

கொழும்பு, ஏப். 10

**இந்தோனேசியா இலங்கையுடன் தனது சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை 2025ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் கைச்சாத்திட உத்தேசித்துள்ளது.**

**இந்த ஒப்பந்தம் குறித்து கடந்த ஒரு வருடகாலமாக ஆரம்பகட்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்று வந்தன.**

சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்து இந்த வார தொடக்கத்தில் முதல் சுற்று பேச்சுகள் நடந்தன. அடுத்த சுற்றுப் பேச்சுகளில் முக்கியமான அத்தியாயங்களுக்குள் நுழைய இருநாட்டு அதிகாரிகளும் நுழைய உள்ளனர்.

“2025 மார்ச் இல் ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் இலக்கை நிர்ணயித்துள்ளோம்”என்று இந்தோனேசியா வர்த்தக அமைச்சு கூறுகிறது.

இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை ஜூன் 19-20 திகதிகளில் கொழும்பில் நடைபெற உள்ளது.

பாம் ஒயில், காகிதம் மற்றும் கொழுப்பு அமிலம் போன்ற இந்தோனேசிய பொருட்களுக்கு இலங்கை சந்தையில் சிறந்த அணுகலைப் பெற இந்த வர்த்தக உடன்படிக்கை உதவக்கூடும் இந்தோனேசியா பிரதி வர்த்தக அமைச்சர் ஜகார்த்தா கூறியுள்ளார்.

இந்தோனேசியா-இலங்கை வர்த்தகம் 2023 ஆண்டில் 369.7 மில்லியன் டொலர்களாக இருந்தது. 2024 ஜனவரியில் இருதரப்பு வர்த்தகம் 23.5 மில்லியன் டொலர்களாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாட்டு நிலை ஏற்படாது!



கொழும்பு, ஏப். 10

பண்டிகைக் காலத்தில் பெரிய வெங்காயத்தை தவிர, ஏனைய எந்தவொரு அத்தியாவசிய பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படாது என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதேநேரம், பண்டிகையை இலக்காகக் கொண்டு வர்த்தகர்கள் பொருட்களின் விலையை செயற்கையாக உயர்த்த முற்பட்டால் அவர்களுக்கு வழங்கப்படும் சகல சலுகைகளையும் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்யும் மற்றும் தரமற்ற பொருட்களை நுகர்வோருக்கு வழங்கும் வர்த்தகர்களுக்கு எதிராகவும் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக நுகர்வோர் விவகார அதிகார சபை நாடளாவிய ரீதியில் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதேவேளை சீனி, தேங்காய் எண்ணெய் உள்ளிட்ட மூலப் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக புத்தாண்டு காலப்பகுதியில் இனிப்புப் பண்டங்களின் விலை அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

(அ)




# வவுனியாவில் கடும் பனி

வவுனியா, ஏப். 10

வவுனியாவில் நேற்று காலை அதிக பனி மூட்டம் காணப்பட்டது.

கடந்த சில நாட்களாக அதிக வெப்பமான வானிலை உணரப்பட்டுவரும் வவுனியாவில் நேற்று காலை அதிகளவான பனி மூட்டம் காணப்பட்டதுடன் வாகன சாரதிகளும் கடும் சிரமங்களுக்கு முகம் கொடுத்தனர்.

நீண்ட காலத்திற்கு பின்னர் இவ்வாறான வானிலை வவுனியாவில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# கல்வியில் புதியன புகாமல் புத்தாக்கம் ஏற்படமாட்டாது

## சஜித் பிரேமதாச கூறுகிறார்



கொழும்பு, ஏப். 10

நாட்டில் ரூபா மற்றும் டொலர் தட்டுப்பாடு நிலவும் இவ்வேளையில், இந்தப் பற்றாக்குறைக்கு யார் தீர்வை வழங்க முடியும் என்பதை நிரூபிக்க இதுவே சிறந்த சந்தர்ப்பமாகும். அதிகாரம் இல்லாமலும் மக்களுக்காகவும் நாட்டுக்காகவும் சேவையாற்றி திறமையை வெளிக்காட்டியுள்ளோம். எனவே மக்கள் இது குறித்து நோக்கி வாக்கை சரியாக பயன்படுத்த முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முறைமை மாற்றத்தை நோக்கிய பயணத்தில் தேய்ந்து போன சம்பிரதாய அரசியல் கலாசாரத்தில் அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்குவோம். சேறுபூசல், வன்முறை மூலம் அதிகாரத்தைக் காட்டுவதை விட, அபிவிருத்திக்கான போட்டியாக பங்கேற்று சிறந்த அரசியல் நடவடிக்கையை மக்களுக்காக முன்னெடுக்கும் போக்கு குறித்து நோக்க வேண்டும். இதன் மூலம் சரியான அபிவிருத்தி பார்வை கொண்டவர் யார், சொல்வதைச் செய்யும் தலைவர் யார் என்பதை மக்களால் தெளிவாக கண்டறிய முடியும்.

தற்போதுள்ள கல்வி முறையை மாற்ற வேண்டும். யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். சிங்களம் மட்டும் தமிழ் மட்டும் என போலியான தேச பற்றை முன்னிலைப்படுத்தி உணர்வுவயமாக செயல்படுவதால் 41 இலட்சம் பிள்ளைகள் அனாதைகளாக்கப்பட்டுள்ளனர். ஆங்கில மொழி கல்வியறிவை உயர் மட்டத்தில் பேணுவதே உலகளாவிய உண்மையாகும். இது குறித்து கூறும் போது சேறுபூசுகின்றனர். கேலி செய்கின்றனர்.

நான் யதார்த்தையே பேசுகிறேன். உலக போக்குக்கு ஏற்ற விதமாக எமது நாட்டில் கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். ஆங்கிலமும் தகவல் தொழிநுட்ப துறைகள் முக்கிய பரப்பாகும். புதியன புகாமல் புத்தாக்கத்தை ஏற்படுத்த முடியாது. முற்போக்கு ரீதியாக கல்விக்கட்டமைப்பில் மாற்றம் நிகழ்ந்தே ஆக வேண்டும். இன்று தனியார் பாடசாலைகளில் கற்கும் பிள்ளைகளுக்கு கிடைக்கும் கற்றல் வசதிகள் அரச பாடசாலைகளில் இல்லை. கல்வியில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் களையப் பட வேண்டும்-என்றார்.

(அ)

# சாகல ரத்நாயக்கவிடம் விசாரணை நடத்துமாறு சி.ஐ.டியில் முறைப்பாடு

கொழும்பு, ஏப். 10

தரமற்ற தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்தமை தொடர்பில் ஜனாதிபதியின் அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்கவிடம் விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலஞ்சம், ஊழல் மற்றும் வீண் விரயத்துக்கு எதிரான குடிமக்கள் சபையின் தலைவர் ஜமுனி கமந்த துஷார இது தொடர்பான முறைப்பாட்டை குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்.

தரமற்ற தடுப்பூசிக் கொள்வனவு தொடர்பான விசாரணைகள் 100 நாட்களுக்கு மேலாகியும் அதற்குப் பொறுப்பான சில அரச அதிகாரிகளை கைது செய்யத் தவறியுள்ளதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# பட்டாசு வெடிப்பதனால் கண்கள் பாதிக்கப்படும்!

கொழும்பு, ஏப். 10

பண்டிகைக் காலங்களில் பட்டாசு வெடிப்பதால் 17 சதவீதம் கண்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என தேசிய கண் வைத்தியசாலை நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

அத்துடன் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் அதிகம் பாதிக்கப்படுவதாகவும் கண் வைத்தியசாலை நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர்க்கச் சிறுவர்கள் எப்போதும் பெரியவர்களின் மேற்பார்வையில் பட்டாசு வெடிக்க வேண்டும் என்றும், தீப்பற்றக்கூடிய பொருட்கள் உள்ள இடங்களில் பட்டாசுகளை வெடிக்கக் கூடாது என்றும் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

பட்டாசு வெடிக்கும் போது தீ காயங்கள் ஏதேனும் ஏற்பட்டால் உடனடியாக வைத்திய ஆலோசனை பெறுமாறும், தீ காயங்களுக்கு கை மருந்து பயன்படுத்துவதைத் தவிர்க்கவும் மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

(அ)

# விபத்தில் சிறுவன் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 10

வெள்ளவாய - மொனராகலை பிரதான வீதியில் எரிபொருள் நிலையத்துக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் 8 வயதும் இரண்டு மாதமுமான சிறுவன் உயிரிழந்துள்ளான்.

ஓட்டோவும் ரிப்பரும் மோதிக் கொண்டபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவக் காட்சிகள் அந்த பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமெராவில் பதிவாகியுள்ளன.

இந்த விபத்தின்போது ஓட்டோவில் பயணித்த தாய், தந்தை அவரது பிள்ளை காயமடைந்ததையடுத்து மூவரும் வெள்ளவாய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதன் போது சிகிச்சை பலனின்றி சிறுவன் உயிரிழந்துள்ளான். சம்பவம் தொடர்பில் ரிப்பர் வாகனச் சாரதி வெள்ளவாய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(அ)

# கம்பஹா துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவருக்கு குற்றச்செயல்களுடன் தொடர்பு இல்லையாம்!

கொழும்பு, ஏப். 10

கம்பஹா கட்டுகஸ்தர பிரதேசத்தில் நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்டவர் எந்த குற்றச் சம்பவங்களுடனும் தொடர்பற்றவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இருப்பினும் இந்த கொலைக்கான காரணம் தெரியவரவில்லையென்றும் சம்பவத்தின் போது சி.சி.ரி.வி கமெராவில் பதிவாகிய காட்சிகளின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிய வருகிறது.

நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற இந்த துப்பாக்கி பிரயோகத்தில் கம்பஹாவின் கட்டுகஸ்தர பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய வாகன திருத்துனர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் பேலியகொட குற்றப் புலனாய்வு பிரிவினர் உட்பட பல்வேறு பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(அ)

# அதிகாலை ஆலயத்துக்குள் வாகனம் புகுந்து விபத்து!

## ஆலய மதில் சேதம் காரைதீவில் சம்பவம்

காரைதீவு, ஏப். 10

**நேற்று அதிகாலையில் ஆலயத்துக்குள் கட்டுப்பாட்டை இழந்து புகுந்த வாகனத்தால் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.**

**இச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை காரைதீவு விபுலானந்த சதுக்க முச்சந்தியில் இடம்பெற்றுள்ளது.**

இவ் விபத்தால் காருக்கும் ஆலய மதிலுக்கும் சேதமேற்பட்டுள்ளது.

கார்ச்சாரதி தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

கொழும்பில் இருந்து கல்முனை சென்றடைய வந்த கார் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது.

மோட்டார் வாகனமானது காரைதீவு பிரதான வீதி முச்சந்தியில் அமைந்திருக்கும் அரசடிப் பிள்ளையார் ஆலயத்தின் மதிலினை உடைத்துக் கொண்டு



உள்ளே சென்றுள்ளது.

மேலதிக விசாரணைகளை காரைதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# அம்பாறை மாவட்ட நல்லிணக்க இப்தார்



காரைதீவு, ஏப். 10

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் அம்பாறை மாவட்ட கிளை ஏற்பாடு செய்த சமூக நல்லிணக்க இப்தார் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை மாலை சாய்ந்தமருது சீப்ரீஸ் விடுதியில் நடைபெற்றது.

மாவட்ட குழுத் தலைவர் மௌலவி ஐ.எல்.எம் ஹாசிம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் சிறப்பு அதிதியாக பங்கேற்றார்.

இஸ்லாமிய,இந்து,கிறிஸ்தவ மத பெரியார்கள், மத பிரமுகர்கள், சமூக சேவையாளர்கள், கல்வியியலாளர்கள் இதில் கலந்து கொண்டார்கள்.

உப தலைவர் விரிவுரையாளர் மௌலவி எஃப் .எம். அன்சார் மௌலானா நன்றியுரையாற்றினார்.

செயலாளர் விரிவுரையாளர் மௌலவி நாசிர்கனி நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார்.

மதத் தலைவர்களின் உரைகளை அடுத்து நோன்புதிறக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இறுதியில் இந்து, கிறிஸ்தவ சகோதரர்களுக்கு பேரிச்சம்பழப் பொதிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (அ)




# நோன்புப் பெருநாளை முன்னிட்டு அன்பளிப்பு பொருட்கள் வழங்கல்

அம்பாறை, ஏப். 10

அம்பாறை மாவட்டத்தில் இயங்கி வரும் ஈ.சீ.எம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நோன்பு பெருநாளை முன்னிட்டு அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்பட்டன.

நிறுவனத்தின் ஸ்தாபகர் உதுமான் கண்டு நாபீர் தலைமையிலான குழுவினர் குறித்த பிரதேசங்களுக்கு சென்று இவ்வன்பளிப்பு பொருட்களை வழங்கி வருவதுடன் அவர்களின் தேவைகளையும் கேட்டறிந்து அவற்றுக்கான உதவிகளையும் செய்து வருகின்றனர். மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, சம்மாந்துறை, மாவடிப்பள்ளி, போனற பிரதேசங்களுக்கு முதற்கட்டமாக வழங்கினர். (அ)

# சம்மாந்துறையில் சமுர்த்தி அபிமானி கண்காட்சியும் விற்பனை நிலையமும்



அம்பாறை, ஏப். 10

சம்மாந்துறை சமுர்த்தி வங்கிச் சங்கத்தினால் நடத்தப்பட்ட சமூர்த்தி அபிமாணி கண்காட்சியும் விற்பனையும் நேற்று முன்தினம் சம்மாந்துறை நகர மண்டபத்தில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனிபா தலைமையில் இடம்பெற்றது.

இக் கண்காட்சிக்கு பிரதம அதிதியாக மாவட்ட சமூர்த்திப் பணிப்பாளர் எம்.ஏ.சி அஹமது ஷாபீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் வங்கிச் சங்க முகாமையாளர், திட்ட முகாமையாளர், முன்னாள் தலைமை முகாமையாளர், கிராம சேவக நிர்வாக உத்தியோகத்தர், வங்கி முகாமையாளர்கள், வலய வங்கி உ.முகாமையாளர்கள், வங்கி வலய கள உத்தியோகத்தர்கள், திட்ட உதவியாளர், சமூர்த்தி தலைமை காரியாலய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச மட்ட வங்கி கட்டுப்பாட்டு சபைத் தலைவர்கள், வர்த்தக தலைவர் உறுப்பினர்கள்,சமூர்த்தி உற்பத்தியாளர்கள், வங்கி வாடிக்கையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# அரசே! அரிசி விலையை குறை!!

## நேற்று அம்பாறையில் பெண்கள் ஆர்ப்பாட்டம்



காரைதீவு, ஏப். 10

அரிசியின் விலையை 100 ரூபாய்க்கும் கீழ் குறைக்குமாறு கோரி இன்று செவ்வாய்க்கிழமை அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆலையடிவேம்பில் வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டு அமைப்பு பாரிய ஆர்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளது.

வடகிழக்கு பெண்கள் கூட்டு அமைப்பின் அம்பாறை மாவட்ட தலைவி திருமதி கலைவாணி தயாபரனின் தலைமையில் ஆலையடிவேம்பு முருகன் ஆலயம் முன்றலில் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் இடம்பெற்றது .

அதன் போது அவர்கள் பல கோஷங்களை எழுப்பி பதாதைகளை தாங்கிய வண்ணம் காணப்பட்டார்கள்.

அவர்களது கோரிக்கை பின்வருமாறு அமைந்திருந்தது.

இலங்கை அரசே! அரிசி விலையை உடனடியாக 100 ரூபாய்க்கும் கீழ் கொண்டு வருக!

ஒட்டுமொத்த இலங்கை மக்களின் அடிப்படை உணவு அரிசிச் சோறு ஆகும். அந்த வகையில் தற்காலத்தில் எமது இலங்கை நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியும் பொருட்களின் விலையேற்றமும் கிராம மட்டங்களிலுள்ள வறிய மற்றும் நடுத்தர குடும்பங்களிலுள்ள பெண்கள் மற்றும் பிள்ளைகள் மத்தியில் பாரிய உணவுப் தட்டுப்பாடு மட்டுமல்லாது போசாக்கு குறைபாடுகளையும் ஏற்படுத்தியுள்ளது. பல மக்கள் தங்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ள

நிலையில் காணப்படுகின்றனர். குறிப்பாக இலங்கையில் கடந்த காலங்களிலும் தற்போதும் ஏற்பட்டுள்ள அரிசியின் விலையேற்றம் என்பது நாளாந்தம் தினக்கூலி வேலை செய்யும் குடும்பங்களுக்கும் கூடுதலான அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களிலும் மூன்று வேளையும் உணவு உண்பதற்குப் பதிலாக ஒன்று அல்லது இரண்டு வேளைகளில் மட்டுமே உணவினை பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் உள்ளனர். சில குடும்பங்களில் சோறு இல்லாமல் கஞ்சி காய்ச்சி குடித்துக் கொண்டும் இருக்கின்றனர். பெண் தலைமை தாங்கும் குடும்பங்களில் இந்த அரிசியின் விலையேற்றம் இன்னும் பட்டினிக்கு தள்ளியுள்ளது.

தொடர்ச்சியாக நாட்டில் ஏற்பட்ட யுத்தம், கோவிட் தாக்கம், வெள்ளம் வரட்சி மற்றும் தற்கால பொருளாதார நெருக்கடி அடிநிலையிலுள்ள வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தின் உணவுத் தேவையில் அதிக தாக்கத்தை செலுத்தியுள்ளது. சிறுவர்கள் கர்ப்பிணித் தாய்மார்கள் பெண்கள் அனைவரும் தமது பசியினைப் போக்குவதற்காக போசாக்கற்ற உணவுகளை உண்ணவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்நிலையால் நாட்டில் போசாக்கற்ற குழந்தைகள் பிறந்திருக்கிறார்கள். நோய்த் தாக்கங்களுக்கும் உள்ளாகி வருகின்றனர். அத்துடன் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் வறுமை காரணமாக சாப்பிடாமல் பாடசாலைகளில் மயங்கி விழுந்துள்ள சம்பவங்களும் பதிவாகியுள்ளது. முதியோர்கள், தொழிலிழந்த ஆண்கள் வறுமைப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்கள் என பலர் தரப்பினரும் உணவுக்காக வீதிகளில் கையேந்துவதை இலங்கை முழுவதும் காணக்கூடியதாகவுள்ளது.

எனவே இலங்கை அரசு மக்களின் வேண்டுகோளையும் பசியின் கொடூர நிலையையும் கவனத்தில் கொண்டு இலங்கையில் அரிசியின் விலையை நூறு ரூபாய்க்கு கீழ் உடனடியாக கொண்டு வரவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம். மக்களின் வறுமை நிலை போக்கி மக்கள் மூன்று வேளையும் பசியின்றி சோறு உண்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்என்று கோருகின்றோம்.

இலங்கை அரசு மக்களின் சோற்றில் கைவைக்காமல் அரிசியின் விலையை 100 ரூபாய்க்கு கீழ் குறைத்து மக்களின் பட்டினிச்சாவை தவிர்த்து மக்களின் பொருளாதார சுமையை குறைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.-என கோரினர். (அ)

# பலஸ்தீனியர் தஞ்சம் புகுந்துள்ள ரஃபா நகரில் தரைவழி தாக்குதல்!

## இஸ்ரேல் இரகசியத் திட்டம்

ஜெருசலேம், ஏப். 10

பலஸ்தீனியர்கள் தஞ்சம் புகுந்துள்ள காஸாக் கரையின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள ரஃபா நகரில் தரைவழித் தாக்குதலுக்கான நேரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவை மேற்கோள் காட்டி சர்வதேச ஊடகங்கள் இந்த செய்தி வெளியிட்டுள்ளன.

எவ்வாறாயினும், தாக்குதல் நடத்தப்படும் திகதி குறித்த எவ்வித தகவல்களும் தற்போது வரை வெளியாகவில்லை.

குறித்த, பகுதியில் சுமார் 1.5 மில்லியன் பலஸ்தீனியர்கள் வாழ்வதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



இதனிடையே, ஐ.நாவில் பலஸ்தீனத்திற்கு முழு உறுப்பு அந்தஸ்து வழங்கப்படுவது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை இம்மாதம் பரிசீலனை செய்யும் என ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# சூரிய கிரகணத்தின்போது சீன நாட்டின் கின்னஸ் சாதனையை முறியடித்த கனடா

ஒட்டாவா, ஏப். 10



2020ஆம் ஆண்டு இடம்பெற்ற சூரிய கிரகணத்தின் போது, சீனா நிகழ்த்தியிருந்த கின்னஸ் சாதனையை, இம்முறை கனடா முறியடித்துள்ளது.

நேற்று முன் தினம் இடம்பெற்ற சூரிய கிரகணத்தின் போது, சூரியனைப்போன்று உடையணிந்து கனேடியர்கள் கின்னஸ் சாதனை படைத்துள்ளனர்.

உலக நாடுகள் பல, முழு சூரிய கிரகணம் என்னும் அபூர்வ நிகழ்வைக் காண ஆங்காங்கே கூடியிருந்த நிலையில், கனேடியர்கள் சிலர், இந்த கின்னஸ் சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.

2020 ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதம் நிகழ்ந்த சூரிய கிரகணத்தின் போது, சீனாவில் 287 பேர், சூரியனைப்போல உடையணிந்து ஒன்று திரண்டு கின்னஸ் சாதனை ஒன்றைப் படைத்தார்கள்.

அந்த சாதனையை முறியடிக்கும் வகையில், கனடாவின் ஒன்ராறியோவிலுள்ள நயகரா நகரில், நயகரா நீர்வீழ்ச்சியின் முன் 309 பேர் சூரியனைப்போல மஞ்சள் நிறத்தில் உடையணிந்து ஒன்று திரண்டுள்ளார்கள்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த ஒருவர் உட்பட, பலர், பல்வேறு காரணங்களுக்காக, கின்னஸ் சாதனை படைக்கக் கூடியது, தங்களுக்கு பெரும் மகிழ்ச்சியளிப்பதாக அங்கு கூடியிருந்தவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஸ்பெயினில் காலநிலை மாற்றம்



லண்டன், ஏப். 10

ஸ்பெயின் நாட்டுக்குப் பயணிக்க உள்ள சுற்றுலாப்பயணிகளுக்கு இரத்த மழை தொடர்பில் பிரித்தானியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஸ்பெயின் நாட்டில் சில இடங்களில் வெப்ப அலை காரணமாக கடுமையான வெயில் நீடித்து வருகிறது.

இதனால், சஹாரா பாலைவனத்தில் காணப்படும் தூசுக்கள் ஸ்பெயின் நாட்டின் பல பகுதிகளை மூடவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்நிலையில், தற்போது ஸ்பெயின் நாட்டில் சில இடங்களில் மழை பெய்து வருவதால், இந்த தூசியும் மழையும் கலந்து இரத்த மழை என்னும் சிவப்பு நிற மழை உருவாக வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த இரத்த மழையினால் வெளிச்சம் குறையும் எனவும், விமானங்களால் பயணிக்க முடியாத சூழ்நிலை ஏற்படும் என கூறப்படுகின்றது.

எனவே, வெளிச்சம் போதாமையால் விமானங்கள் இரத்து செய்யப்படலாம் அல்லது தாமதமாகலாம் என பிரித்தானிய வெளியுறவு துறை அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக ஸ்பெயினுக்கு சென்றுள்ள பிரித்தானியர்கள் குறித்த இயற்கை மாறுபாட்டால் பாதிக்கப்படக்கூடும் என பிரித்தானிய வெளியுறவு அலுவலகம் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# அமெரிக்காவில் படுகொலை செய்யப்படும் இந்தியர்கள்!

## காணாமல்போன மாணவன் சடலமாக மீட்பு

நியூயோர்க், ஏப். 10

கடந்த மாதம் காணாமல் போன இந்திய மாணவர் முகமது அப்துல் அர்பாத், ஓஹியோவில் உள்ள கிளீவ்லேண்டில் உயிரிழந்துவிட்டதாக நியூயோர்க்கில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் உயிரிழந்த இந்திய மாணவன் சடலமாக கண்டெடுக்கப்பட்டதாக இந்திய தூதரகம் நியூயார்க்கில் உள்ள இந்திய தூதரகம் அறிவித்துள்ளது.


இந்த மாணவன் அமெரிக்காவின் ஓஹியோ மாகாணத்தில் சடலமாக கண்டெடுக்கப்பட்டதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

நியூயோர்க்கில் உள்ள இந்திய துணைத் தூதரகம் எக்ஸ் பக்கத்தில்,

"முகமது அப்துல் அர்பத்தின் மரணம் தொடர்பாக முழுமையான விசாரணையை உறுதி செய்வதற்காக அமெரிக்க பொலிஸாருடன் ஆலோசித்து வருகின்றோம்.

அர்பத்தின் அஸ்தியை இந்தியாவுக்குக் கொண்டு செல்ல, அவரது குடும்பத்தினருக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்வோம்" என தனது இரங்கலை பதிவிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு மே மாதம் மேல் படிப்பிற்காக குறித்த மாணவன் அமெரிக்காவுக்குச் சென்ற நிலையில் கடந்த மார்ச் மாதம் 7 ஆம் திகதி காணாமல் போயுள்ளார்.




இதனையடுத்து மார்ச் 19 அன்று, அர்பத்தின் குடும்பத்தை தொடர்பு கொண்ட அடையாளந்தெரியாத நபர்கள் சிலர்,

"அர்பத் கடத்தப்பட்டுள்ளார். விடுவிக்க வேண்டும் என்றால், டொலர் 1,200 பணம் வேண்டும் என்றும்.அவ்வாறு பணம் கிடைக்காத பட்சத்தில் அர்பத்தின் சிறுநீரகத்தை விற்று விடுவோம்" என அச்சுறுத்தியதாக குறித்த மாணவனின் தந்தை உறுதிப்படுத்தியிருந்தார்.

கடந்த வாரம், ஓஹியோவில் உமா சத்ய சாய் காடே என்ற இந்திய மாணவி சடலமாக கண்டெடுக்கப்பட்டார்.

இந்நிலையில் ஒரு வாரத்துக்குள் அமெரிக்காவில் உயிரிழந்த இரண்டாவது இந்தியர் "முகமது அப்துல் அர்பத் என்ற 25 வயது மாணவன் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, 2024ஆம் ஆண்டு ஆரம்பமானதிலிருந்து இதுவரையான காலப்பகுதியில் 11 இந்தியர்கள் சடலமாக அமெரிக்காவில் கண்டெடுக்கப்பட்டுள்ளனர்.

இந்திய மாணவர்கள் அமெரிக்காவில் மர்மமான முறையில் உயிரிழக்கும் சம்பவம் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

இவ்வாறான சம்பவங்கள் உலக மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

(அ)

# ஹவுதி கிளர்ச்சியாளர்களின் ஏவுகணைகள் தாக்கி அழிப்பு!

நியூயோர்க், ஏப். 10

யேமனில் ஹவுதிக் கிளர்ச்சியாளர்களின் வசமிருந்த இரு ஏவுகணைகளை அழித்துள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அத்துடன் செங்கடலை நோக்கி ஏவப்பட்ட ஒரு ஆளில்லா வான்வழி அமைப்பையும் அழித்துள்ளதாக அமெரிக்க இராணுவத்தின் மத்திய கட்டளைப் பிரிவு அறிவித்துள்ளது.

இதேவேளை ஏடன் வளைகுடாவில் பிரித்தானியாவிற்கு சொந்தமான சரக்குக் கப்பல் மீது ஹவுதிக் கிளர்ச்சியாளர்கள் பாலிஸ்டிக் ஏவுகணையைக் கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இருப்பினும் இத்தாக்குதலில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்றும் கப்பல்கள் சேதமடையவில்லை என்றும் அமெரிக்க இராணுவத்தின் மத்திய கட்டளை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கட்சியையும் நாட்டையும் அழித்துவிட்டார் மைத்திரி

## சந்திரிகா குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 10

**முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கட்சியையும் அழித்து நாட்டையும் அளித்துள்ளார் என சுதந்திர கட்சியின் முன்னாள் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

அவரால் இழைக்கப்பட்ட தவறுக ளையே தற்போது நாம் நிவர்த்தி செய் துள்ளோம் என் றும் அவர் கூறினார்.

சுதந்திரக் கட்சியில் உள்ளக ரீதியில் பல்வேறு நெருக்கடிகள் நிலவும் நிலை யில் நேற்று முன்தினம் அந்தக் கட்சியின் செயல் குழு கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் கூடியது.

அந்த நிகழ்வுக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க வருகை தந்போது அவரிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள் விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2015 ஆம் ஆண்டில் என்னை ஜனாதி பதித் தேர்தலில் நிற்கச் சொன்னபோது நான் கட்சியின் பொதுச் செயலாளரான மைத்திரிபால சிறிசேனவை வேட்பாளராக நிறுத்த நடவடிக்கை எடுத்தேன். அவர் பதவியை வைத்துக் கொண்டு

கட்சியை மட்டுமன்றி நாட்டையும் அழித்துவிட்டார்.

வீழ்ச்சியடைந்த கட்சியை மீண்டும் நிச்சயமாக பலமான தாக கட்டியெழுப்ப முடியும்.

கட்சியின் யாப்பை அவர் மாற்றியுள் ளார். அதை வைத்து தன்னிச்சையாக செய்யப்பட் டுள்ளார். எனினும் அதனை தாம் மாற்றவில்லை என அவர் தெரிவித் துள்ளார். அவருக்கு மனநிலை பாதிப்பு என்று நினைக்கின்றேன்-என்றார்.

(அ)

## சுகாதார பரிசோதகர்கள் சோதனை; 8 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல்!

வவுனியா, ஏப். 10

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையில் 8 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, 90 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன், ஒருவருக்கு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

தமிழ்-சிங்கள புதுவருடப் பிறப்பை முன்னிட்டு வவுனியா நகரப்பகுதி, வைரவபுளியங்குளம், குருமன்காடு ஆகிய பகுதிகளிலுள்ள பல்பொருள் விற்பனை நிலையங்கள், வெதுப்பகங்கள், உணவகங்கள் போன்றவற்றில் சுகாதார பரிசோதகர்களால் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

பழுதடைந்த பொருட்களை விற்பனை செய்தமை, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, விலைகள் பொறிக்கப்படாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் 8 பேருக்கு எதிராக முதல் கட்டமாக வவுனியா நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதில் 6 பேருக்கு 90 ஆயிரம் ரூபா அபராதம் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளதுடன், ஒருவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மற்றுமொரு வழக்கு திகதியிடப்பட்டுள்ளது. பண்டிகைக் காலத்தை முன்னிட்டு மக்களுக்கு பாதுகாப்பானதும், சுகாதாரமானதுமான பொருட்களை வழங்கும் பொருட்டு சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

(அ)

## 3 மாதங்களில் சுற்றுலாப் பயணிகளால் 1,025 மில்லியன் டொலர்கள் வருமானம்!

கொழும்பு, ஏப். 10

2024ஆம் ஆண்டின் முதல் 3 மாதங்களில், 635,784 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக, சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதன் மூலம் 1,025 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாக கிடைத்துள்ளன. 1 வருடத்தில் இலங்கைக்கு வருகை தந்த அதிகூடிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, இந்த வருடத்தில் பதிவாக வாய்ப்புள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

2018ஆம் ஆண்டு இலங்கைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாகவும், அந்த எண்ணிக்கை 23 இலட்சம் எனவும் அவர் மேலும் கூறினார்.

(அ)

## மக்களுக்கு நிவாரணங்கள் வழங்க 2023இல் 200 பில்லியன் ரூபா செலவு

கொழும்பு, ஏப். 10

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 2023 ஆம் ஆண்டில் மாத்திரம் 200 பில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி பணிப்பாளர் நாயகம் (சமூக விவகாரங்கள்) ரஜித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

2024 மார்ச் 31 வரையில் நிவாரணம் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 1,854,308 ஆக காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நாட்டு மக்கள் எதிர்நோக்கிய கடுமையான பொருளாதாரச் சிரமங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதை அரசாங்கம் தனது பொறுப்பாகக் கருதுகிறது.

சமுர்த்தி உதவி, சமுர்த்தி கடன், 70 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கான கொடுப்பனவு, 100 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கான கொடுப்பனவு, அங்கவீனர்களுக்கான கொடுப்பனவு, சிறுநீரகக் கோளாறினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு மற்றும் அஸ்வெசும கொடுப்பனவு என 2023 ஆம் ஆண்டில் மாத்திரம் 184,098.27 மில்லியன் ரூபா அரசாங்கத்தினால் நிவாரண உதவித்தொகை தேவைப்படும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அஸ்வெசும மேல் முறையீடுகள் மற்றும் நிலுவைகள் உட்பட 2023 ஆம் ஆண்டில் சமூக பாதுகாப்பு வலையமைப்பிற்காக அரசாங்கம் செலவிட்ட மொத்தத் தொகை சுமார் 189,650.95 மில்லியன் ரூபா (189.6 பில்லியன்) ஆகும்.

முதல் கட்டமாக நிவாரணம் பெறாதவர்களுக்கு 2024 பெப்ரவரியில் 1813 மில்லியன் ரூபா நிவாரணம் வழங்கப்பட்டது. இது தவிர அஸ்வெசும மேன்முறையீட்டு மனுக்களை பரிசீலித்த பின்னர் மேலும் 13,697.35 மில்லியன் ரூபா நிதி வறுமையில் உள்ள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி கடனாக வழங்கப்பட்ட தொகையுடன், 2023 ஆம் ஆண்டில் சமூக பாதுகாப்பு வலையமைப்பிற்காக அரசாங்கம் செலவிட்ட மொத்தத் தொகை ரூ. 199,608.62 மில்லியன் அதாவது சுமார் 200 பில்லியன் ரூபா. 2022 ஜூலை மாதத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதன் பின்னர், டிசம்பர் 2023 வரை (17 மாதங்களுக்குள்) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் 129.93 பில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது, இதில் சமுர்த்தி கொடுப்பனவாக 65.91 பில்லியன் ரூபா ஏழைகளுக்கு வறுமையில் உள்ள மக்களுக்காக வழங்கப்பட்டுள்ளது.

சமூகப் பாதுகாப்புக் கொடுப்பனவுகளுக்கு (பிறப்பு, திருமணம், இறப்பு, நோய்கள், புலமைப்பரிசில்கள், இரட்டைப் பிறப்புகள்) வழங்கப்படும் தொகை 4.52 பில்லியன் ரூபாவாகும். இது தவிர சமுர்த்தி வங்கி இதே காலப்பகுதியில் 59.5 பில்லியன் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது-என்றார்.

# நல்லை ஆதீனத்தில் சிறப்புற இடம்பெற்ற சிந்தனை அரங்கம்





யாழ்ப்பாணம், ஏப். 10

அறிவாலயம் ஆளுமை விருத்தியக ஏற்பாட்டில் தமிழகத்தின் பிரபல பேச்சாளர் இலக்கிய சுடர் இராமலிங்கம் பங்கேற்க சிந்தனை அரங்கம் கடந்த சனிக்கிழமை மாலை செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நல்லூரில் நடைபெற்றது.

விவசாய அமைச்சின் உத்தியோகத்தர் நடராஜா ஐங்கரனின் முன்னிலைப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை வழங்கினார்.

தமிழி அமைப்பின் பெருந்தலைவர் நிகேதன் வரவேற்புரை ஆற்றினார்.

நிகழ்வில் இளைஞர்களின் எதிர்காலத்தை ஆகச் சிறப்பாக செப்பனிடுவது எந்த சூழல் என்ற வகையில் வீட்டுச் சூழலே என தென்னாடு பத்திரிகை ஆசிரியர் ஜீவா சஜீவனும் கல்வி சூழலே என கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவி கிளிநொச்சி அபிராமியும் நட்புச் சூழலே என பேராதனை பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் சாரங்கனும் சமுதாய சூழலே என தமிழ்நாடு தேவகோட்டை யோகேஸ்குமாரும் கருத்துரைத்தனர். இலக்கிய சுடர் இராமலிங்கம் நடுவராக செயற்பட்டார். இலக்கிய சுடரை கல்விக் காருண்யன் ஈ எஸ் பி நாகரத்தினமும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சிரேஸ்ட விரிவுரையாளர் கு. பாலசண்முகனும் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் கௌரவித்தனர்.

நிகழ்வில் நூற்றுக் கணக்கான இலக்கிய ஆர்வலர்கள் பங்கு பற்றினர்.

(அ)

## காலாவதியான அழகுசாதனப் பொருட்கள் அத்துருகிரியவில் சிக்கின!

கொழும்பு, ஏப். 10

நுகர்வோர் அதிகார சபையின் சோதனைகள் மற்றும் விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் காலாவதியான அழகுசாதனப் பொருட்கள் மற்றும் குழந்தைகளின் சுகாதாரப் பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இவை அத்துருகிரிய பிரதேசத்தில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. இதன் பெறுமதி 50 இலட்சம் ரூபா என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் சோதனைகள் மற்றும் விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் தொடர்பான விசாரணையின்போது இது தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்டதாக அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

உறுதிப்படுத்தப்பட்ட தகவலின்படி, விசேட தள்ளுபடியுடன் விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்ட காலாவதியான பொருட்களின் இருப்பு காணப்பட்டது. இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

(அ)

## இரா. சம்பந்தன்...

ஆளுவதற்காக நான் அவர்களுக்கு அறிவுரை வழங்குவதற்கு அல்ல. முக்கியமாக தமிழ் மக்களின் அவலங்களை உலகறியச் செய்யவே பாராளுமன்ற தேர்தலில் நான் பங்கேற்றேன். எனது பதவியானது நாட்டின் மற்றைய இனங்களுக்கும் உலகத்தோருக்கும் எமது வடக்கு, கிழக்கு தமிழர்கள் பற்றிய அறிவைக் கொண்டு செல்லவே பாவிக்கப்படுகின்றது. இதுவரையில் பல வெளிநாட்டு அரச அலுவலர்களுக்கு எம் உண்மை நிலைபற்றி அறிவித்துவிட்டேன். மேலும், எமது நாட்டின் மக்களின் வரலாறு பற்றியும் கூறிவருகின் றேன்.

அரசாங்கத்திடம் இருந்து அமைச்சுப் பதவிகளையோ வேறு சலுகைகளையோ பெற எத்தனிப்பவர்கள் தான் சிங்களப் பெரும்பான்மையோர் தமக்கு சாதகமாக சட்டம் இயற்ற விழையும் போது அவர்களுக்கு உதவிபுரியவேண்டும். ஆனால், தமிழ் மக்களுக்குப் பாதகம் மற்றும் பங்கம் ஏற்படுத்தும் சட்டவரைவுகளை விமர்சித்தே வருகின்றேன். எனது பாராளுமன்ற பேச்சுகளை பரிசீலித்துப் பார்ப்பீர்களானால் அது புரியும்.

எனது முக்கிய கடமையாக நான் ஏற்றுக்கொண்டிருப்பன பின்வருமாறு தமிழ் மக்களின் அவலநிலையை உலகத்தோருக்கும் இந்நாட்டு மக்களுக்கும் எடுத்துக் கூறுவது, நடக்கும் அநியாயங்களை அடையாளப்படுத்தி அவை நடவாமல் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் எடுப்பது, எமது வடக்கு - கிழக்கு தமிழ்பேசும் மக்களை ஒற்றுமைப்படுத்துவது.

சிங்களத் தலைவர்களை நான் அறிவேன். காரியம் ஆகும் வரையில் காலைப் பிடிப்பார்கள் - காரியமானவுடன் கழுத்தைப் பிடிப்பார்கள் அவ்வாறானவர்களுக்கு எனது அறிவையும் நிபுணத்துவத்தையும் நேரத்தையும் செலவிடுவதால் எமது தமிழ்பேசும் மக்களுக்கு எதுவும் ஆகப்போவதில்லை.

இவ்வாறான சிந்தனையின் அடிப்படையிலேயே தமிழ்பேசும் பொதுவேட்பாளர் ஒருவரை ஜனாதிபதி தேர்தலில் பங்குபற்ற வைக்க வேண்டும் என்று கூறி வருகின்றேன்.

சம்பந்தன் துரதிர்ஷ்டவசமாகத் தனது சொந்த காரணங்களுக்காக தமிழ் வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்துவதை எதிர்க்கின்றார். வட, கிழக்கு தமிழ் மக்களின் வருங்காலம் பற்றி அவர் ஆழ்ந்து சிந்தித்தால் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தி தேர்தலில் பங்குபற்ற வைப்பதே உசிதமான செயல் என்று விளங்கும். சம்பந்தன் தற்போதும் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்திலேயே வாழ்ந்து வருகின்றார்.

அரசாங்க பெரும்புள்ளிகளின் தயவிலேயே அவர் அங்கு வாழ்கின்றார். சிங்கள வேட்பாளர்களுக்கு கிடைக்கக்கூடிய தமிழரின் வாக்குகள் சிதறிப்போவதை இதனால்தான் அவர் எதிர்க்கின்றார். தமிழர்களின் இறந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் கூர்ந்து அவதானித்தாரானால் தமிழரின் எதிர்காலம் பற்றி ஆழமாக சிந்திப்பாரானால் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதை அவர் மனமார வரவேற்க வேண்டும்.

தமிழ் பொதுவேட்பாளர் தகைமைகள் உடையவராக இருந்தால் பல நன்மைகளை தமிழ்மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பார்-

1. தமிழர்களின் அரசியல் பிரச்னை இன்றுவரை தீரக்கப்படவில்லை என்பதையும் எமது பிரச்னை என்ன என்பது பற்றியும் மக்களுக்கும் மற்றைய நாட்டவர்களுக்கும் அவர்களுக்கு புரியும் மொழியில் சொல்லி வைக்கலாம்.

2. தமிழர்கள் எதை தீர்வாக பெற எத்தனிக்கிறார்கள் என்பது பற்றியும் அதற்கான காரணங்களையும் வெளிப்படையாக எடுத்துக் கூறலாம்.

3. தமிழ்பேசும் மக்களிடையே ஒற்றுமையை நிலைநாட்டலாம்.

4. பேரம்பேசவரும் மற்றைய போட்டியாளர்களை எதைத் தருவீர்கள் என்று கேட்டு அவர்களை வெளிப்படையாக ஏற்க வைக்கலாம். இதற்கு ஏதேனும் ஒரு நாட்டின் இராஜதந்திரியை மத்தியஸ்தராக நிலைநிறுத்தி எழுத்தில் உடன்பாட்டைப் பெற்றபின் தமிழர்கள் என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றித் தீர்மானிக்கலாம்.

5. பகிஷ்கரிப்பதால் எந்த நன்மையும் ஏற்படாது. அரசாங்க ஆதரவு சக்திகள் எங்கள் வாக்குகளையும் தமது தலைவர்களுக்குப் பெற்றுக்கொடுத்து விடுவார்கள். முன்னர் பகிஷ்கரித்தபடியால் பதவிக்கு வந்தவர்கள்தான் பகிஷ்கரிக்க கோரியவர்களை அழித்தார்கள் - ஆயுதங்களை மௌனிக்கச் செய்தார்கள்.

6. இன்னுமோர் உபாயம் உள்ளது. தமிழர்கள் அனைவரையும் தமது வாக்குகளை தகுதியற்றதாக்கக் கோரலாம். ஆனால் அதிலும் அரச சார்பு சக்திகளின் நடவடிக்கைகள் எமக்கு தோல்வியையே நல்கும்.

என்னிடம் கேட்ட கேள்விக்கு மேலதிகமாகவே பதில் அளித்துள்ளேன். காரணம் எமது பிரச்னைகள் வேறு - மத்திய அரசாங்கத்தின் மற்றும் சிங்கள அரசியல்வாதிகளின் பிரச்னை வேறு. எம்மை பலமிழக்கச் செய்து எமக்கு பல இன்னல்களை விளைவிக்கும் மத்திய அரசாங்கத்துக்குத் துணை போகாது எமது மக்களுக்கான சேவையை ஆற்றுவதே எனது கடப்பாடு. அதனையே நான் செய்து வருகின்றேன் - என்றுள்ளது. (ஐ)

## பொது தமிழ்...

எம். பி. தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு,

கடந்த காலங்களில் தமிழ் மக்கள், குறிப்பாக வட, கிழக்கு ஈழத்தமிழ் உடன்பிறப்புகள், தென்னிலங்கை தமிழ் வேட்பாளர்களுக்கு தாராளமாக வாக்களித்தார்கள்.

ஒருமுறை தேர்தலை பகிஷ்கரித்தார்கள். இந்த இரண்டு செயன்முறைகளும் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டை தராத காரணத்தால்தான், இன்று பொது தமிழ் வேட்பாளர் என்ற யோசனை முன்வைக்கப்பட்டு கலந்துரையாடப்படுகிறது. இதன் சாத்தியப்பாடு, பயன்பாடு தொடர்புகளில் கவனமாக ஆராய வேண்டும். இவ்விதமாக தமிழ் பொது வேட்பாளர் போட்டியிடுவார் எனில் அவருக்கு தமிழ் வாக்காளர்கள், குறிப்பாக வட, கிழக்கு தமிழ் வாக்காளர் கள் ஒட்டுமொத்தமாக வாக்களிப்பார்கள் என்பதை உறுதி செய்ய வேண்டும்.

அடுத்தது, இதன் மூலமாக முழு உலகுக்கும் இலங்கை தமிழர்கள் சார்பில் என்ன சொல்லப்படவுள்ளது என்பது தீர்மானிக்கப்பட வேண்டும்.

தமிழ் தேசிய அரசியல் பரப்பில் சில கட்சிகள் இன்று ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என்று கோருகின்றன. அவற்றின் சாத்தியப்பாடு, பயன்பாடு தொடர்பில் பல்வேறு கருத்தோட்டங்கள் இருக்கின்றன. ஆனால், இத்தகைய கருத்துகளை முன்வைக்க, அந்த கட்சிகளுக்கு உரிமை இருக்கின்றது.

ஆனால், பகிஷ்கரிக்க வேண்டாம், பொது தமிழ் வேட்பாளர் வேண்டும் என்று சொல்பவர்கள், அதன்மூலம் உலகத்துக்கு என்ன சொல்ல விரும்புகிறார் கள் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். குறைந்தபட்ச அல்லது அதிகபட்ச கோரிக்கை நிலைபாடுகள், அபிலாசைகள் என்ன? என்பவை பற்றி உரையாட வேண்டும்.

இன்னமும் ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்படவில்லை. இதற்கிடையே பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பாராளுமன்ற தேர்தலும் நடைபெறலாம். மறுபுறம், தேர்தல்கள் ஆணையாளர் என்ன சொன்னாலும்கூட, ஜனாதிபதி தேர்தலும் பாராளுமன்ற தேர்தலும் ஒருசேர நடந்தாலும் ஆச்சரியப்பட முடியாது. ஆகவே, இவை அனைத்தையும் கணக்கிலெடுக்க வேண்டும். இங்கே பொது தமிழ் வேட்பாளரை அடையாளம் காணும் முன்னர் பொது தமிழ் அரசியல் அபிலாசை என்ன என்று தீர்மானிக்க வேண்டும். இதுவே, பிரதான தேவை - என்றார். (ஐ)

## தமிழ் பொது...

அல்லது ஒக்ரோபர் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தென்னிலங்கையில் இருக்கின்ற கட்சிகள், வேட்பாளர்கள் ஏற்கனவே பிரசாரங்களை ஆரம்பித்து விட்டார்கள். தற்போது போட்டி நான்காக அதிகரித்துள்ளது போல் தோற்றமளிக்கிறது. ஆனால், இவர்கள் யாரும் இலங்கையில் இருக்கக்கூடிய தேசிய இனப்பிரச்னை தொடர்பில் பேசக்கூடியவர்களாக இல்லை.

கடந்த 7ஆம் திகதி வவுனியாவில் நடந்த ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஐந்தும் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும் விடயத்தில் இணங்கின. இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் போட்டியிடுவது தொடர்பிலான கலந்துரையாடல் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

இதுவரை யார் பொது வேட்பாளர் என்பது பிரேரிக்கப்படவில்லை. ஆனாலும், மதங்களைக் கடந்து வடக்கு - கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரே போட்டியிடுவார். மலையகம் மற்றும் முஸ்லிம் மக்களின் ஆதரவை நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம். அவர்களுடனும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் சம்மதித்தால் அவர்களுடனும் பேச நாம் தயார்.

பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்படவேண்டும் என்பதில் உடன்பட்டுள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைப் பொறுத்தவரை முக்கிய தலைவர்கள் எமது நிலைப்பாட்டுக்கு ஆதரவாக உள்ளனர். எம். ஏ. சுமந்திரன் இதற்கு எதிராக உள்ளார். - என்றார்.

## ரணிலை...

பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமை பணிமனையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட பொதுஜன பெரமுனவில் உறுப்பினர்கள் எவரும் இல்லை என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிடுவது அவரின் தனிப்பட்ட நிலைப்பாடே தவிர கட்சியின் நிலைப்பாடல்ல.

கட்சி மட்டத்தில் உத்தியோகபூர்வ தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் பட்சத்தில் தனிப்பட்ட கருத்துகளை குறிப்பிடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு கட்சியின் உள்ளக மட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை அவர் விளங்கிக் கொள்வார் என்று எதிர்பார்க்கிறேன்.

ஜனாதிபதி வேட்பாளரை களமிறக்கும் இயலுமை எமக்கு உள்ளது. வேட்பாளரை அறிவிக்கக் காலம் உள்ளது. சிறந்ததை இறுதியில் அறிவிப்போம். வெற்றிபெறும் வேட்பாளரையே நாங்கள் களமிறக்குவோம் என்பதை பிரசன்ன ரணதுங்க நன்கு அறிவார் - என்றார். (ஐ)

## கட்சி...

தவிசாளர் பதவியை வகிக்க மைத்திரிக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இந்நிலையில் பதில் தவிசாளராக அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். அவரின் நியமனம் சட்டவிரோதம் என மைத்திரி தரப்பு கூறியுள்ளது.

இதற்கிடையில் சுதந்திரக் கட்சியின் தலைமையகத்துக்கு பூட்டு போடப்பட்டுள்ளது. நேற்று காலை பதில் பொதுச்செயலாளர் துஷ்மந்த மித்ரபால தலைமையிலான குழுவொன்று அங்கு சென்றதால் பரபரப்பு ஏற்பட்டது. (அ)

## 779...

பின் 34 (1)ஆவது சரத்தின் பிரகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த பொது மன்னிப்பு அளிக்கப்படவுள்ளது. (ஐ)

## விமல்...

தேர்தலை இலக்கு வைத்தே இக்கூட்டணிக்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.இடதுசாரி கூட்டணியாக மே தினத்தை நடத்துவது பற்றியும் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி தேர்தலில் நபரொருவரை ஆதரிப்பதா அல்லது தமது அணியில் ஒருவரை களமிறக்குவதா என்பது பற்றி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. (அ)

## ஜனாதிபதி...

விக்கிரமசிங்க, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இணைந்து புதிய விதிமுறைகளை திருத்தியிருந்தனர். அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட புதிய திருத்தத்துக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஹைதராபாத்...

செய்துள்ளது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை அந்த அணி தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளது.

முன்னதாக, வியாஸ்காந்த் எல். பி. எல். தொடரில் யாழ்ப்பாணம் கிங்ஸ் அணிக்காக விளையாடினார். தொடர்ந்து கடந்த ஆண்டு ஐ. பி. எல். தொடரில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் வலைப் பயிற்சி பந்து வீச்சாளராக பங்களிப்பு செய்திருந்தார். இந்த நிலையிலேயே சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கு உள்வாங்கப்பட்டுள் ளார்.

இதேநேரம், மற்றொரு யாழ்ப்பாண வீரரான மாதுளன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் வலைப் பயிற்சி பந்து வீச்சாளராக அண்மையில் இணைத்துக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மக்கள்...

நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தவை வருமாறு,

தமிழர்களின் தேசிய பிரச்னை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சிறீதரன் சம்பந்தன் உள்ளிட்ட தமிழ் அரசியல் தலைவர்களைவிட எமக்குக் கரிசனை உண்டு. தமிழ் மக்களின் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் திடமாக உள்ளோம்.

தமிழ் மக்களின் பிரச்னையை இனம் கண்டுள்ளோம். அதற்கான தீர்வை பரிந்துரை செய்யவுள்ளோம். தீர்வு என்ன என்பதை மிக விரைவில் தெரியப்படுத்துவோம். தற்போது அது தொடர்பில் சிவில் அமைப்புகள் உள்ளிட்ட தரப்புகளுடன் கலந்துரையாடி வருகிறோம். அடுத்து தமிழ் கட்சிகளோடு பேசவுள்ளோம்.

தமிழ் மக்கள் யாரை ஆதரிக்க வேண்டும் என்பது, அவர்களுடைய சுயவிருப்பம். ஆனால், பொதுவான நிலைப்பாடு மாற்றம் வேண்டும் என்ற நிலைமையே தற்போது காணப்படுகின்றது.

கடந்த 75 ஆண்டுகளாக நீலம், பச்சை என மாறி மாறி ஆட்சிக்கு வந்து மக்களுக்கு வாய்க்கரிசி போட்டுள்ளார்கள். எனவே, மாற்றம் வேண்டும் என பெரும்பாலான மக்கள் சிந்திக்கின்றனர். அநுரதான் அடுத்தது எனப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. மாற்றத்தையே ஒட்டு மொத்த இலங்கை மக்களும் விரும்புகின்றனர்.

இந்த நிலையில் தமிழ் பொது வேட்பாளர் பேசுவது மீண்டும் நீலம் , பச்சையைத்தான் வீறு கொள்ள வைக்கும். ஆகவே, தமிழ் மக்கள் சிந்தித்துச் செயல்படுவார்கள் என நம்புகிறோம் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# சந்திரிகா அணி பற்றி 18ஆம் திகதி தீர்மானம்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஏப். 10

**சுதந்திரக் கட்சியின் அரசியல் குழுவில் எடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பில் எதிர்வரும் 18ஆம் திகதி கூடி தீர்மானம் எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

சுதந்திரக் கட்சியின் அரசியல் குழுவின் குழுவொன்று நேற்று முன்தினம் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் தீர்மானங்களைக் கையளித்துள்ளது.

அரசியல் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட புதிய நியமனங்கள் குறித்து ஆணைக்குழுவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க, பொருளாளர் லசந்த அழகியவன்ன மற்றும் வீரகுமார திஸாநாயக்க ஆகியோர் அரசியல் பீடத்தின் தீர்மானங்களைத் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளித்தனர்.

சுதந்திரக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் நேற்று முன் தினம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் கொழும்பு அறக்கட்டளையில் நடைபெற்றது. கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் நிமல் சிறிபால டி சில்வாவினால் இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# கிளிநொச்சியிலும் போராட்டம்




கிளிநொச்சி, ஏப். 10

அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் குறைக்குமாறு கோரி கிளிநொச்சி பேருந்து நிலையம் முன்பாக நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு பெண்கள் கூட்டு கழகத்தினால் முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டத்தில் ஏராளமானோர் கலந்து கொண்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இதன்போது அரிசியின் விலையை 100 ரூபாயாகக் குறைக்குமாறும், மனித உயிர்களைக் காவு வாங்காமல் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைக்குமாறும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (அ)

# அரிசியின் விலையை குறைக்குமாறு சாவகச்சேரியில் நேற்று போராட்டம்!







யாழ்ப்பாணம், ஏப். 10

"அரசாங்கம் உடனடியாக அரிசியின் விலையை குறைக்கவேண்டும்" என வலியுறுத்தி சாவகச்சேரி பஸ் நிலையம் முன்பாக நேற்று காலை போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு பெண்கள் கூட்டு அமைப்பினரால் முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டத்தில் ஏராளமானோர் கலந்துகொண்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இதன்போது போராட்டத்தில் கலந்துகொண்ட பெண்கள் 'அரிசியின் விலையேற்றத்தால் பசியில் வாடுகிறோம், வளச் சுரண்டல்களை நிறுத்து, பொருளாதார சுமையைக் குறை, ஏழையின் வயிற்றில் அடிக்காதே, பட்டினிச் சாவு வேண்டாம், பிள்ளைகளை பசியால் வாட்டாதே போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். (அ)

# கோணேஸ்வரத்தில் தேரில் ஏறி அருட்காட்சி கொடுத்தார் சிவன்



திருமலை, ஏப். 10

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருத்தலமும் திருஞான சம்பந்தரால் பாடல் பெற்ற தலமுமான திருக்கோணேஸ்வர ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமான நிலையில் நேற்று இரதேற்சவம் இடம்பெற்றது.

நேற்றுக் காலை வசந்த மண்டபப் பூசையை தொடர்ந்து எம்பெருமான் தேரில் ஏறி அடியவர்களுக்கு அருட்காட்சியளித்திருந்தார்.

ஐந்தொழில்களில் ஒன்றான அழித்தல் என்ற சிறப்பியல்பை குறிப்பதே இந்த இரதோற்சவத்தின் மகிமையாகும்.

நேற்று காலை பெருமான் மாதுமை அம்பாள் சமேதமாக தேர் ஏறி வலம் வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி கொடுத்தார். இன்று தீர்த்தோற்சவம் நடைறெவுள்ளது.

இதனைத் தொடர்ந்து நாளை பூங்காவனம் நடைபெறவுள்ளது. (அ)

# மியன்மாரில் சிக்கியுள்ள இலங்கையரை விடுவிக்க தந்திரோபாய திட்டம் தேவை!

கொழும்பு, ஏப். 10

மியன்மாரில் ஆயுதம் ஏந்திய குழுவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை விடுவிப்பதற்கு தந்திரோபாய திட்டம் தேவை என மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் ஜனக பண்டார தெரிவித்துள்ளார்.

56 இலங்கை இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டு பல்வேறு குற்றச்செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருவது சில மாதங்களுக்கு



முன்பு தெரியவந்தது. இந்நிலையிலேயே ஆயுததாரிகளிடம் சிக்கியுள்ள இலங்கையர்களை மீட்பது தொடர்பில் மியன்மாருக்கான தூதுவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும் மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 8 பேர் அண்மையில் விடுதலை செய்யப்பட்டதாகவும், மீட்கப்பட்டவர்கள் தாய்லாந்து ஊடாக நாட்டுக்கு அனுப்பப்படவுள்ளதாகவும் மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் ஜனக பண்டார குறிப்பிட்டார். (அ)

# புத்தாண்டை முன்னிட்டு கிராமங்களுக்கு விசேட தொலைதூர போக்குவரத்து சேவை

கொழும்பு, ஏப். 10

புத்தாண்டை முன்னிட்டு கிராமங்களுக்கு செல்லும் மக்களுக்காக விசேட தொலைதூர போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ் சிங்கள புத்தாண்டு தொடங்கும் இந்த வாரம் கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் பணிபுரியும் பலர் தங்கள் கிராமங்களுக்குச் செல்ல தயாராக உள்ளனர்.

அவர்களுக்காக இம்முறையும் விசேட தொலைதூர போக்குவரத்து சேவைகள் செயற்படுகின்றன.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இலங்கை போக்குவரத்துச் சபை 1,400 பஸ்களை சேவையில் ஈடுபடுத்தவுள்ளது.

மேலும், பண்டிகை காலத்தை முன்னிட்டு கிராமங்களுக்கு செல்லும் பொதுமக்களுக்காக 12 சிறப்பு ரயில்களை இயக்க ரயில்வே திட்டமிட்டுள்ளது.

இலங்கை ரயில் திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் நந்தன இண்டிபோலகே, ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் பதுளைக்கு இரண்டு விசேட ரயிலள் சேர்க்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பெலியத்தையில் இருந்து மருதானை வரையிலும், காலியில் இருந்து கொழும்பு கோட்டை வரையிலும் 4 விசேட ரயில்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், ஏப்ரல் 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் வெளி மாகாணங்களில் இருந்து கொழும்புக்கு மேலதிக ரயில்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஏப்ரல் 13ஆம் திகதிக்கு பின்னர் கொழும்புக்கு வரும் மக்களின் தேவைக்கு ஏற்ப பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதி பொது முகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹன்ச தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு



# தோல்வியிலிருந்து மீண்டது சென்னை!

சென்னை, ஏப். 10

அடுத்தடுத்து இரு தோல்விகளை சந்தித்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நேற்றைய ஐ. பி. எல். போட்டியில் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணியை ஏழு விக்கெட்க ளால் வெற்றி கொண்டது.

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற சி. எஸ். கே. அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. இதன்படி கொல் கத்தா அணியின் ஓப்பனராக களமிறங்கிய பிலிப் சால்ட் முதல் பந்திலேயே ஆட்டமிழந்தது கொல்கத்தா ரசிகர் களுக்கு அதிர்ச்சியளித்தது. முதல் ஓவர் முடிவில் ஒரு விக்கெட்டுக்கு ஓர் ஓட்டமே எடுத்திருந்தது கொல்கத்தா.



சுனில் நரைன் - அங்கிரிஷ் ரகுவன்ஷி நிதான ஆட் டத்தை வெளிப்படுத்தி பவர் ப்ளே வரை விக்கெட் விழாமல் பார்த்துக்கொண்டனர். ஸ்ரேயாஸ் ஐயர் - ரிங்கு சிங் கூட்டணி அமைத்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை ஏற்ற முயற்சித்தனர். ரிங்கு சிங் 9 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து வந்த ரஸல் 10 ஓட்டங்களில் கிளம்பினார்.

அணித்தலைவர் ஸ்ரேயாஸ் ஐயரும் 34 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, அவரைத் தொடர்ந்து வந்த மிற்செல் ஸ்டார்க் டக் அவுட்டான நிலையில், 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்களை இழந்த கொல்கத்தா 137 ஓட்டங்களை சேர்த்தது.

138 ஓட்டங்கள் என்ற இலக்குடன் அடுத்ததாக களமிறங்கிய சி. எஸ். கே. அணியின் தொடக்க வீரர்களான ருதுராஜ் கெய்க்வாட் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். மறுபுறம் 8 பந்துகளில் 15 ஓட்டங்களுடன் வெளியேறினார் ரச்சின் ரவீந்திரா.

அடுத்து களமிறங்கிய டெரில் மிற்செல் 12ஆவது ஓவர் வரை தாக்குப் பிடித்து 25 ஓட்டங்களை எடுத்தார். சுனில் நரைன் வீசிய பந்தில் போல்ட் ஆகி வெளியேறினார் மிற்செல்.

இந்தப் போட்டியில் அணியின் தலைவர் ருதுராஜ் - சிவம் துபே இணை அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 13ஆவது ஓவரின் முடிவில் ருதுராஜ் 53 ஓட்டங்களை குவித்திருந்தார். சிவம் துபே ஒரு பௌண்ட்ரி, 3 சிக்ஸர் என மொத்தம் 28 ஓட்டங்களை சேர்த்தார். 16ஆவது ஓவரில் வைபவ் வீசிய பந்தில் சிவம் துபே ஆட்டமிழந்தார்.

அடுத்தததாக அரங்கமே அதிரும் வகையில் களமிறங்கிய டோனி அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தாமல் 3 பந்துகளில் ஒரேயோர் ஓட்டம் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். ஆட்டத்தின் முடிவில் ருதுராஜ் கெய்க்வாட் 67 ஓட்டங்களை (9 பௌண்ட்ரிகள்) குவித்திருந்தார். 17 ஓவர்களில் 7 விக்கெட் வித்தியா சத்தில் கொல்கத்தா அணியை வீழ்த்தியது சென்னை சுப்பர் கிங்ஸ். (ஐ)



## ரசிகர்களை ஏமாற்றிய ஜடேஜா!

சென்னை, ஏப். 10

நேற்று முன்தினம் நடந்த சென்னை - கொல்கத்தா போட்டியில் ஜடேஜா ரசிகர்களை விளையாட்டாக ஏமாற்றிய காணொலி சமூகவலைதளங்களில் பிரபலமாகி வருகின்றது.

கொல்கத்தா அணிக்கு எதிரான இந்தப் போட்டியில் சென்னை அணியின் வெற்றிக்கு மூன்று ஓட்டங்கள் தேவைப்படும்போது துடுப்பாட்ட வரிசைப்படி ஜடேஜாதான் களத்துக்கு வர வேண்டும். ஆனால், டோனியின் வருகைக்காக ரசிகர்கள் காத்திருந்தனர். அப்போது ஜடேஜா துடுப்பு மட்டையுடன் வந்தார்.

இதனை பார்த்தவுடன் சரி இன்றைய ஆட்டத்தில் டோனி வரமாட்டார் என முடிவெடுத்தனர். அப்போது மைதானத்தை நோக்கி வந்த அதேவேகத்தில் ஜடேஜா திரும்பி உள்ளே ஓடினார். அதன் பிறகே டோனி மைதானத்துக்கு வந்தார்.

அப்போதுதான் தெரிந்தது, ஜடேஜா ரசிகர்களை ஏமாற்றும் விதமாக இவ்வாறு செய்திருக்கிறார். இதனை சி. எஸ். கே. அணியில் உள்ள மற்ற வீரர்களும் நிர்வாகிகளும் கைதட்டி கொண்டாடினார்கள். இந்த காணொலி சமூவலைதளங்களில் பிரபலமாகியுள்ளது. (ஐ)

## 100 பிடிகளை எடுத்தார் சென்னையின் ஜடேஜா



சென்னை, ஏப். 10

ஐ. பி. எல். கிரிக்கெட்டில் 100 பிடிகளை எடுத்து சாதனை படைத்துள்ளார் சென்னையின் ஜடேஜா.

சென்னை சுப்பர் கிங்ஸ் - கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்றது. முதலில் விளையாடிய கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணியால் 9 விக்கெட் இழப்புக்கு 137 ஓட்டங்கள் மட்டுமே சேர்த்தது.

ஜடேஜா அபாரமாக பந்து வீசி 3 விக்கெட்களை வீழ்த்தினார். அத்துடன் சால்ட் மற்றும் ஷ்ரேயாஸ் ஐயர் அடித்த பந்தை பிடியெடுப்பு செய்தார்.

இதன்மூலம் ஐபிஎல் கிரிக்கெட்டில் 100 பிடிகளை பிடித்து அசத்தியுள்ளார். அத்துடன், 100 பிடிகளை எடுத்த 5ஆவது வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

விராட் கோலி 110 பிடிகளுடன் முதல் இடத்தில் உள்ளார். சுரேஷ் ரெய்னா 109 பிடிகள், பொலார்ட் 103 பிடிகளுடன் முதல் மூன்று இடங்களில் உள்ளனர். (ஐ)

## எல். பி. எல். ரி - 20 தொடர் ஜூலை 1இல் ஆரம்பம்!




கொழும்பு, ஏப். 10

எல். பி. எல் எனப்படும் லங்கா பிறீமியர் லீக் தொடரின் 4ஆவது தொடர் எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

முதல் போட்டியில், நடப்பு சம்பியன் பி லவ் கண்டி அணியும் தம்புள்ளை ஔவ்ரா அணியும் பல்லேகலையில் மோதவுள்ளன.

அறிமுக விழாவை பிரமாண்டமாக நடத்த சிறீ லங்கா கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது.

லங்கா பிறீமியர் லீக் தொடரில் 5 அணிகள் பங்கேற்கின்றன. இரண்டு சுற்றுகளைக் கொண்ட இந்தத் தொடரில் ஒவ்வோர் அணியும் முதல் சுற்றில் 4 போட்டிகளிலும் இரண்டாவது சுற்றில் 4 போட்டிகளிலுமாக மொத்தம் 8 போட்டிகளில் விளையாடும்.

முதல் சுற்றிலிருந்து இறுதி ஆட்டம்வரை மொத்தம் 24 போட்டிகள் நடைபெறும்.

முதல் சுற்று ஜூலை 1ஆம் திகதியிலிருந்து 9ஆம் திகதி வரையும் இரண்டாம் சுற்று 9ஆம் திகதியிலிருந்து 16ஆம் திகதிவரையும் நடைபெறும். இரண்டு சுற்றுகள் நிறைவில் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள் ஜூலை 18ஆம் திகதி முதலாவது தகுதிகாண் போட்டியில் விளையாடும்.

மூன்றாம், நான்காம் இடங்களைப் பெறும் அணிகள் அதே தினத்தன்று முதலாவது நீக்கல் போட்டியில் விளையாடும். முதலாவது தகுதிகாண் போட்டியில் தோல்வி அடையும் அணியும் நீக்கல் போட்டியில் வெற்றிபெறும் அணியும் ஜூலை 20ஆம் திகதி நடைபெறவுள்ள 2ஆவது நீக்கல் போட்டியில் விளையாடும்.

இந்தப் போட்டியில் வெற்றிபெறும் அணி முதலாவது தகுதிகாண் சுற்றில் வெற்றிபெறும் அணியை சம்பியனை தீர்மானிக்கும் ஜூலை 21ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் எதிர்த்தாடும்.

இறுதிப் போட்டிக்கு ஜூலை 22ஆம் திகதி மேலதிக நாளாக ஒதுக்கப்பட்டுள்ளது.

முதல் சுற்று பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கிலும் ரங்கிரி, தம்புளை சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கிலும் நடைபெறும். இரண்டாம் சுற்றும் இறுதிச் சுற்றும் கொழும்பு ஆர். பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெறும். (ஐ)

## பாகிஸ்தான் அணியின் பயிற்றுநராக மஹ்மூத்



கராச்சி, ஏப். 10

பாகிஸ்தான் அணியின் தலைமை பயிற்றுநராக அந்த அணியின் முன்னாள் சகலதுறை வீரரான அசாத் மஹ்மூத் நியமிக்கப்பட்டுள்ளார்.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் ஆட உள்ளது. இந்த தொடர் வரும் 18ஆம் திகதி தொடங்குகிறது. இந்த தொடருக்கான நியூசிலாந்து அணிக்கு மைக்கல் பிரேஸ்வெல் தலைவராகநியமிக்கப்பட்டுள்ளார்.

தலைமை பயிற்றுநர் இல்லாமல் செயல்பட்டு வரும் பாகிஸ்தான் அணிக்கு இந்த தொடரை முன்னிட்டு புதிய தலைமை பயிற்றுநர் நியமிக்கப்பட்டுள்ளார். பாகிஸ்தானுக்காக விளையாடிய சகலதுறை வீரர் அசாத் மஹ்மூத் புதிய தலைமை பயிற்றுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் முகமது யூசுப் துடுப்பாட்ட பயிற்றுநராக பயிற்சியாளராகவும், சயீத் அஜ்மல் பந்துவீச்சு பயிற்றுநராகவும், வஹாப் ரியாஸ் அணியின் மேலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## காஸாவில் போர் தொடங்கி 6 மாதங்கள் நிறைவு:

# ஹமாஸை அழிப்பதில் இஸ்ரேல் எந்தளவுக்கு முன்னேறியுள்ளது?

**மெரிலின் தாமஸ் மற்றும் ஜேக் ஹார்ட்டன்**



ஹமாஸ் ஆயுதக்குழுவினர் அக்டோபர் 7 அன்று காஸா வழியாக இஸ்ரேலுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தி, சுமார் 1200 பேரைக் கொன்றனர், நூற் றுக்கணக்கான மக்களைப் பணயக் கைதி களாகப் பிடித்தனர். இத்தாக்குதல் நடந்து ஆறு மாதங்க ளாகி விட்டன.

இதற்குப் பதிலடியாக, பணயக் கைதிகளை ஹமாஸ் பிடியிலிருந்து விடுவித்து அவர்களை வீடு திரும்பச் செய்வோம் என்றும் “ஹமாஸை அழித்து ஒழிப்போம்” என்றும் இஸ்ரேல் உறுதியளித்தது.

இஸ்ரேல்-ஹமாஸ் இடையே தொடரும் போரில், குறைந்தது 33,000 பாலத்தீனர்கள் கொல்லப்பட்டதாகவும் காஸா பகுதியின் பெரும்பகுதி அழிக்கப்பட்டதாகவும், ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் ஆயுதக்குழுவின் ஆயிரக்கணக்கானோரைக் கொன்றதுடன், காஸாவில் பூமிக்கடியில் ஹமாஸ் தாக்குதல்களை நடத்தப் பயன்படுத்தும் பரந்த சுரங்கப்பாதை வலையமைப்பை அழித்ததாகவும் இஸ்ரேல் கூறுகிறது.

### எத்தனை ஹமாஸ் தலைவர்கள் இறந்தார்கள்?

அக்டோபர் 7 ஆம் தேதிக்கு முன்னர், காஸாவில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் சுமார் 30 ஆயிரம் பேர் இருந்ததாக, இஸ்ரேல் பாதுகாப்புப் படையின் தளபதிகளை மேற்கோள் காட்டி கூறப்பட்டது.



ஹமாஸின் மிகப்பெரிய தலைவர் இஸ்மாயில் ஹனியா உட்பட பல மூத்த அரசியல் பிரமுகர்கள் வெளிநாடுகளில் வசிக்கின்றனர். ஆனால், அதன் உயர் மட்ட ராணுவ அதிகாரிகள் பலர் காஸாவிற்குள் இருப்பதாக நம்பப்படுகிறது.

போர் தொடங்கியதில் இருந்து சுமார் 13 ஆயிரம் ஹமாஸ் ஆயுதக்குழுவினரை கொன்றுள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் சமீபத்திய அறிக்கையில் தெரிவித்துள்ளது. இருப்பினும், இந்த தரவு எவ்வாறு சேகரிக்கப்பட்டது என்பதை இஸ்ரேல் தெரிவிக்கவில்லை.

கொல்லப்பட்டதாகக் கூறப்படும் ஹமாஸ் தலைவர்களின் பெயர்களையும் இஸ்ரேல் வெளியிட்டது. அக்டோபர் மாதம் முதல் இதுபோன்ற 113 பேரின் பெயர்களை இஸ்ரேல் வெளியிட்டுள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் போரின் முதல் மூன்று மாதங்களில் உயிரிழந்தனர். இதனுடன் ஒப்பிடுகையில்,

இந்த ஆண்டு மார்ச் வரை காஸாவில் எந்த மூத்த ஹமாஸ் தலைவரும் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவிக்கவில்லை.

மார்ச் 26 அன்று, ஹமாஸின் ராணுவப் பிரிவின் துணைத் தளபதி மர்வான் இசாவை கொன்றதாக இஸ்ரேல் ராணுவம் கூறியது.

இஸ்ரேலில் மிகவும் தேடப்படும் நபராகக் கருதப்படும் இசா, இப்போர் தொடங்கியதிலிருந்து கொல்லப்பட்ட ஹமாஸின் மூத்தத் தலைவர் ஆவார்.

அவர் கொல்லப்பட்டதாக நம்புவதாக அமெரிக்கா கூறியது. ஆனால் ஹமாஸ் இசாவின் மரணத்தை உறுதிப்படுத்தவில்லை.

கொல்லப்பட்ட மூத்த ஹமாஸ் தலைவர்களின் பெயர்களை இஸ்ரேல் ராணுவம் வெளியிட்டது. ஆனால், இவர்கள் ஹமாஸின் உறுப்பினர்களா இல்லையா என்பதை உறுதிப்படுத்த முடியாது.

இப்பட்டியலில் ஹமாஸ் குழுவில் அல்லாதவர்கள் சிலரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. அவர்களுள் ஒருவர் முஸ்தஃபா துரையா. இவர், தெற்கு காஸாவில் சுயாதீன பத்திரிக்கையாளராக பணிபுரிந்து கொண்டிருந்த போது, ஜனவரி மாதம் அவரது வாகனம் இஸ்ரேலிய தாக்குதலுக்கு உள்ளானது.

மேலும், இப்பட்டியலில் சிலரது பெயர்கள் இருமுறை குறிப்பிடப்பட்டிருந்தன. அதனால், அவர்களின் பெயர்களை மொத்த எண்ணிக்கையில் சேர்க்கவில்லை.

காஸாவிற்கு வெளியே உள்ள ஹமாஸின் அரசியல் தலைவரான சலே அல் - அரூரி இந்த ஆண்டு ஜனவரியில் பெய்ரூட்டில் நடந்த குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார். இந்த தாக்குதலுக்கு இஸ்ரேல் பொறுப்பேற்றது.

எனினும், யாஹ்யா சின்வார் உட்பட காஸாவில் உள்ள பல முக்கிய ஹமாஸ் தலைவர்கள் இன்னும் உயிருடன் இருப்பதாக நம்புவதாக நாங்கள் பேசிய நிபுணர்கள் தெரிவித்தனர்.

“ஹமாஸின் உயர்மட்ட தலைவர்களை இஸ்ரேல் ராணுவத்தால் அடைய முடியவில்லை” என, சர்வதேச நெருக்கடிக் குழுவில் இஸ்ரேல்-பாலத்தீன விவகாரங்கள் குறித்த மூத்த ஆய்வாளர் மைரவ் சோன்ஸ்சீன் கூறினார்.

“ஹமாஸின் கட்டுப்பாட்டில் இருந்து அப்பிரதேசத்தை விடுவிப்பதையும் இஸ்ரேலால் இன்னும் சாதிக்க முடியவில்லை” என்று அவர் கூறுகிறார்.

### காஸாவில் எத்தனை பணயக்கைதிகள் எஞ்சியுள்ளனர்?

இஸ்ரேலின் அதிகாரப்பூர்வ புள்ளி விவரங்களின்படி, அக்டோபர் 7 ஆம் தேதி 253 பேர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். இவர்களுள், தனித்தனி ஒப்பந்தங்கள் அல்லது கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தங்களின் கீழ் 109 பேர் விடுவிக்கப்பட்டனர்.

மூன்று பேரை இஸ்ரேல் ராணுவம் நேரடியாக ராணுவ நடவடிக்கை மூலம் காப்பாற்றியது.

பணயக் கைதிகள் 11 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. ராணுவ நடவடிக்கையின் ஒரு பகுதியாக கொல்லப்பட்டதாக, இஸ்ரேல் ராணுவம் ஒப்புக்கொண்ட மூவரும் இவர்களில் அடங்குவர்.

பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டவர்களுள் உயிருடன் உள்ளவர்களில், இளையவரின் வயது 18 என்றும், மூத்தவரின் வயது 85 என்றும் கூறப்படுகிறது.

மீதமுள்ள 130 பணயக்கைதிகளில், இஸ்ரேலின் கூற்றுப்படி, 34 பேர் இறந்துள்ளனர்.

இஸ்ரேல் ராணுவத்தின் வான்வழித் தாக்குதல்களால் கொல்லப்பட்ட பணயக் கைதிகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதாக ஹமாஸ் கூறுகிறது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்த முடியாது.

ஹமாஸால் பிடிக்கப்பட்ட இரண்டு இளம் பணயக்கைதிகள் ஏரியல் மற்றும் ஃபிர். இருவரும் பணயக்கைதிகளாக

(16 ம் பக்கம் பார்க்க)



# வடக்கில் நிலவும் அமைதி, வழமைநிலையின் அடிப்படையில்...



கலாநிதி.ஜெகான் பெரேரா



போர் முடிவுக்கு வந்து 15 வருடங்கள் நிறைவடையப்போகும் நிலையில், வடக்கு, கிழக்கிற்கு வரும் எந்தவொரு சுற்றுலாப் பயணியும் முதலில் பார்க்கும்போது அங்கு போர் ஒன்று இடம்பெற்றதா என்பதை புரிந்துகொள்வதில் சங்கடத்தை எதிர்நோக்கக்கூடும். வடக்கிலும் தெற்கிலும் உள்ள நகரங்களுக்கிடையில் பெரிதாக வேறுபாடு இல்லை. அங்கு அமைதியும் வழமை நிலையும் நிலவும் தோற்றப்பாட்டையே உல்லாசப் பயணிகள் காண்பார்கள்.

ஒரு முன்னணி உலக ஊடகமும் விருந்தோம்பல் தொழிற்துறை தளமுமான ரைம்அவுட்.கொம் (Timeout.com) வெளியிட்டிருக்கும் அறிக்கையின பிரகாரம் தன்னந்தனியனான பெண் பயணிகளுக்கு பாதுகாப்பான முதல்தரமான நாடாக பெருமைக்குரிய நாடாக இலங்கை விளங்குகிறது. விருந்தோம்பலிலும் பாதுகாப்பிலும் இலங்கைக்கு இருக்கும் நற்பெயர் தனியான பெண் பயணிகளுக்கு அதன் மீதான நாட்டத்தை மேலும் அதிகரிக்கிறது.

உள்ளூர் மக்களின் அன்பும் நட்புணர்வும் ஒப்பீட்டளவில் குற்றச்செயல்கள் வீதத்தின் குறைவும் பெண் பயணிகளுக்கு கவலை இல்லாத சுகானுபவத்தைக் கொடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குகின்றன. கட்டுப்படியாகக்கூடிய கட்டணங்களில் தங்குமிடவசதி, நம்பகமான பொதுப்போக்குவரத்து மற்றும் நன்கு அபிவிருத்தி செய்யப்பட்ட சுற்றுலாத்துறை உட்கட்டமைப்பு போன்ற நடைமுறை அனுகூலங்களையும் பெண் பயணிகளுக்கு இலங்கை வழங்குகிறது.

ஆனால், வெளியில் உள்ள தோற்றப்பாட்டுக்கு அப்பால் விளங்கிக்கொள்ள முடியாத பல விடயங்கள் இருக்கின்றன. கடந்தவாரம் வடக்கிற்கு பயணம் செய்தபோது ரைம்அவுட்.கொம் கூறிய அமைதியையும் வழமைநிலையையும் கண்டேன். வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் உள்ளதாக அவர் நினைக்கும் வேறுபாடு என்ன என்று அரசாங்க அதிகாரி ஒருவரிடம் கேட்டேன். வடக்கையும் தழுவியதாகவே தெற்கில் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. 37 வருடங்களுக்கு முன்னர் 1987 இல் சிங்களத்துடன் சேர்த்து தமிழும் உத்தியோகபூர்வ மொழியாக்கப்பட்ட போதிலும் தெற்கில் இருந்து கடிதங்கள் சிங்கள மொழியிலேயே வருகின்றன என்று ஒரு கணமேனும் தயங்காமல் அவர் பதிலளித்தார்.

சிங்களத்துக்கு சமமானதாக அரசியலமைப்பில் தமிழ் இல்லை என்பது உண்மையே. “(1) இலங்கையின் உத்தியோகபூர்வ மொழியாகச் சிங்களம் இருக்கும் (2) தமிழும் ஒரு உத்தியோகபூர்வ மொழியாக இருக்கும்” என்று அரசியலமைப்பின் 18 வது சரத்து கூறுகிறது. சிங்களமும் தமிழும் உத்தியோகபூர்வ மொழிகளாக இருக்கும் என்று இதை ஒரு வசனத்தில் கூறியிருக்கமுடியும். ஆனால், ஒரு வசனத்துக்கு பதிலாக இரு வசனங்கள் காணப்படுகின்றன.

நாட்டின் உத்தியோகபூர்வ மொழியாக ஆங்கிலத்தை எந்த மொழி பதிலீடு செய்யவேண்டும் என்ற கேள்வி 1956 “சிங்களம் மட்டும்” சட்டத்துக்கு வழிவகுத்தது. தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் விட சிங்களம் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருந்ததால் ஒரு மொழி மாத்திரம் அதுவும் சிங்களம் உத்தியோகபூர்வ மொழியாக இருக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. தெற்கில் உள்ளவர்களினால் எடுக்கப்பட்ட தீர்மானம் வடக்கில் உள்ளவர்களைப் பாதித்தது.

தற்போது அரசாங்கத்தினால் ஆராயப்படுகின்ற ஆனால் வடக்கையும் பாதிக்கின்ற ஒரு பிரச்சினயாக மீன்பிடி உரிமைகள் விளங்குகின்றன. இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களை மீன்பிடிக்க அனுமதிக்குமாறு இந்திய அரசாங்கத்திடமிருந்து இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதல் கொடுக்கப்படுகிறது. 1974 ஆம் ஆண்டில் இலங்கைக் கடற்பரப்பிற்குள் இருப்பதாக இந்தியா இணங்கிக்கொண்ட கச்சதீவு தொடர்பான மூண்டிருக்கும் தகராறு இலங்கை மீது நெருக்குதலைக் கொடுப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது.

### மீன்பிடி உரிமை

இந்த பிரச்சினைக்கு தீர்வைக்கண்டு வடக்கில் உள்ள மீனவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு பல முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. இலங்கைப் பக்கத்துக்கு வராமல் இந்திய மீனவர்கள் இந்தியக் கடற்பரப்புக்குள்ளேயே மீன்பிடிக்கக்கூடிய தாக அவர்களுக்கு சிறிய படகுகளை மேற்குலக தொண் டர் நிறுவனங்களிடம் இருந்து பெறப்படும் உதவியின் மூலமாக வாங்குவதற்கு மதக்குழுக்கள் முன்வந்ததாக நான் கேள்விப்பட்டேன்.

இந்தியாவில் அரசியல் தொடர்புகளைக் கொண்ட பெரிய வர்த்தகர்களுக்கு சொந்தமான இழுவைப்படகுகள் பெரும் எண்ணிக்கையில் இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவுவதை தடுக்கமுடியும் என்ற நம்பிக்கையே இந்த யோசனையின் அடிப்படையாகும். கணிசமான மீன்களைப் பிடித்துக்கொண்டு திரும்பாவிட்டால் படகுகளில் உள்ள மீனவர்களுக்கு சம்பளம் கிடைக்காது என்றும் கூறப்பட்டது.

அதனால் மீனவர்களுக்கு சொந்தமாக சிறிய படகுகள் இருந்தால் இழுவைப்படகுகளைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக மீனாபிடிப்பதற்கு எல்லையைக் கடந்து இலங்கை கடற்பரப்புக்குள் வரவேண்டிய தேவை அவர்களுக்கு இருக்காது.

ஆனால் மீன்பிடித் தொழிற்துறையை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பலம்பொருந்திய புள்ளிகள் சிறிய படகுகளை நிர்மூலம் செய்துவிடக்கூடும் என்ற அச்சத்தில் வறிய மீனவர்கள் அந்த யோசனையை ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை என்றும் கூறப்பட்டது.




பேச்சுவார்த்தை மூலமாக நடைமுறைச் சாத்தியமான தீர்வொன்றைக் காண்பதற்கு தவறியதன் விளைவாக இலங்கை அரசாங்கம் இலங்கையின் கடற்பரப்புக்குள் ஊடுருவும் இந்திய மீனவர்களைக் கைதுசெய்யவும் அவர்களின் படகுகளைத் தடுத்துவைக்கவும் கடற்படையை நிலைவைத்தது. பல வருடங்களாக இலங்கை கடற்படையினரால் ஆறாயிரத்துக்கும் அதிகமான இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் ஆயிரம் படகுகள் தடுத்து வைக்கப்பட்டதாகவும் இந்திய அரசாங்கம் சுட்டிக்காட்டியது.

மக்கள் பக்கமாக தாங்கள் நிற்பதாக காண்பித்து இந்திய மீனவர் சமூகத்தின் வாக்குளைப் பெறுவதற்காக இந்திய அரசாங்க தலைவர்கள் தேர்தல் காலத்தில் அக்கறை காட்டுகிறார்கள். இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் வந்து மீன்பிடிப்பநற்கு சட்டரீதியான உரிமைகளைக் கொடுக்கவேண்டும் என்று இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதல் கொடுக்கப்படுகின்றது போன்று தெரிகிறது. இது இந்திய வர்த்தகர்களை மகிழ்ச்சிப்படுத்தும் என்பதுடன் இந்த தேர்தலின்போது இந்திய அரசாங்கத்துக்கு அனுகூலமாகவும் அமையும்.

ஆனால், இலங்கை மீனவர்களே இதற்காக பெரிய விலையைச் செலுத்தவேண்டியிருக்கும். இலங்கையில் சட்டவிரோதமானதாக இருக்கும் பெரிய இழுவைப்படகு மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களுடன் இலங்கை மீனவர்கள் போட்டிபோடவேண்டியிருக்கும். இலங்கை அதன் மீனவர்களில் முதலீடு செய்வதன் மூலமாக பரந்த கடற்பரப்பில் உள்ள வாய்ப்புக்களை பயன்படுத்த வேண்டியது அவசியமாகும். தெற்கில் உள்ளவர்கள் வடக்கில் உள்ள மக்களுக்கு பாதகமாக அமையக்கூடிய முடிவுகளை எடுக்காமல் அவர்களைப் பலப்படுத்தக்கூடிய நடவடிக்ககளிலேயே அக்கறை காட்டவேண்டும்.

வடக்கில் உள்ளவர்களின் பொருளாதார நலன்களுக்கு பாதகமான சட்டங்களை இயற்றுவதற்கு புறம்பாக தெற்கில் உள்ளவர்கள் வடக்கு மக்களின் இனத்துவப் பெருமை உணர்வைப் பாதிக்கும் வகையிலான சடடங்களையும் கொண்டுவருகிறார்கள்.

மே 18 ஆம் திகதி வடக்கில் உள்ள மக்கள் உள்நாட்டுப்போர் முடிவின் பதினைந்தாவது வருடாந்தத்தை நினைவு கூரவிருக்கிறார்கள். அத்தகைய நினைவுகூரல் நிகழ்வுகளை விடுதலை புலிகளுக்கு புத்துயிர் கொடுக்கும் நோக்குடனான முயற்சிகள் என்று கூறி அவற்றைத் தடுப்பதற்காக சட்டங்களிலும் ஒழுங்குவிதிகளிலும் திருத்தங்களைச் செய்வதற்கு அரசாங்கம் தயாராகிவருவதாக பெரும் விசனம் காணப்படுகிறது.

1998 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்பீட்டு அலுவலகச் சட்டத்தின் 27 வது பிரிவு கூட்டு மற்றும் தனிப்பட்ட இழப்பீடு என்பது எந்த வகையில் அமையும் என்பதை விபரிப்பதுடன் அத்தகைய முன்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு அலுவலகத்துக்கு ஆணையும் வழங்குகிறது.

### விடுதலை புலிகள் பற்றிய பீதி

போரில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஏற்பாடு செய்கின்ற நினைவுகூரல் நிகழ்வுகளில் அரசாங்கம் தலையிடாவிட்டால் அவை எந்தவிதமான துரதிர்ஷ்டவசமான சம்பவமும் இன்றி அன்றைய தினம் கடந்துபோய்விடும் என்ற அபிப்பிராயத்தை நான் பேசிய அரசாங்க அதிகாரிகள் கொண்டிருக்கிறார்கள். இறந்துபோனவர்கள் மற்றும் காணாமல்போனவர்கள் பால் தங்களுக்கு இருக்கும் கடமையை நிறைவேற்ற அந்த குடும்பங்கள் விரும்பினாலும் பெரும்பாலான மக்கள் அந்த நினைவுகளைக் கடந்து செல்லவே விரும்புகிறார்கள் என்றும் அந்த அதிகாரிகள் கூறினார்கள்.

அரசாங்க தரப்பிலும் வடக்கிலும் உள்ள குறிப்பிட்ட சில சக்திகள் முரண்நிலையைத் தீவிரப்படுத்துவதற்கு விரும்புவதே இங்குள்ள பிரச்சினையாகும். முரண்நிலை தீவிரமடைந்தால் தாங்கள் ஒரு பாத்திரத்தை வகிப்பதற்கு அனுகூலமான சூழ்நிலை உருவாகும் என்று இரு தரப்புகளும் எதிர்பார்க்கின்றன.

இலங்கையிலும் சர்வதேச ரீதியாகவும் தடை செய்யப்பட்டிருக்கும் விடுதலை புலிகளை நினைவுகூரும் பொது நிகழ்வுகளை அனுமதிக்க அரசாங்கம் விரும்பவில்லை என்றபோதிலும் கூட மக்கள் தங்களது அன்புக்குரியவர்களை (அவர்கள் விடுதலை புலிகளாக இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன) நினைவுகூருவதற்கு குறுக்கே அரசாஙகம் நிற்கக்கூடாது.

விடுதலை புலிகள் இயக்கத்தை மீள்விப்பதற்கு விரும்புகின்றவர்கள் மீதான தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகள் அநாவசியமாக குழப்பத்தை ஏற்படுத்தி வடக்கில் உள்ள மக்களை அன்னியப்படுத்தக் கூடிய மட்டங்களை அடையலாம்.

நான் வடக்கில் இருந்தபோது தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடம்பெற்ற ஒரு சம்பவம் பற்றி கேள்விப்பட்டேன். அது பழைய மிசனரிமாரினால் தாபிக்கப்பட்ட மதிப்புமிக்க கல்லூரி.

கல்லூரியின் இல்ல விளையாட்டுப் போட்டியின் போது ஒரு இல்லத்தின் கூடாரத்தில் போர்த்தாங்கியின் வடிவில் சோடனைகள் செய்யப்பட்டிருந்தது. இன்னொரு இல்லத்தின் கூடாரத்தில் விடுதலை புலிகள் தங்களது தேசிய மலர் என்று பிரகடனம் செய்த கார்த்திகைப்பூவின் வடிவில் சோடனைகள் செய்யப்பட்டிருந்தன.

இதை அறிந்த பொலிசார் கல்லூரி வளாகத்துக்குச் சென்று சோடனைகளை புகைப்படம் எடுத்ததுடன் வீடியோவிலும் பதிவுசெய்தனர். கல்லூரி ஆசிரியர்களும் அதிபர்களும் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டனர். அங்கு அதிபரின் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது.

கார்த்திகைப்பூ மருத்துவ உலகில் மிகவும் பெறமதி வாய்ந்தது. பாரம்பரிய மருந்தாக இந்தப் பூவை மக்கள் நீண்டகாலமாக பயன்படுத்திவருகிறார்கள். அதைப் பன்படுத்தக்கூடிய பல்வேறு வழிகள் குறத்து விஞ்ஞானிகள் இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். அது பெரும் இலாபம் தரும் ஏற்றுமதி பயிராக மாறக்கூடிய சாத்தியமும் இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இளைஞர் யுவதிகள் மத்தியின் மனங்களை வென்றெடுக்கும் நடவடிக்கைகளை சில வாரங்களுக்கு முன்னதாக இலங்கை கடற்படை முன்னெடுத்திருந்தது. மிகவும் குறைந்த ஆயிரம் ரூபா கட்டணத்தில் இளைஞர்களை விமானப்படை வீரர்கள் விமானத்தில் ஏற்றி யாழ்ப்பாண நகரை ஆகாயமார்க்கமாகச் சுற்றிக் காண்பித்ததாகவும் எனக்கு கூறப்பட்டது.

விமானப்படை அதன் போர் உபகரணங்களை காட்சிக்கு வைத்ததாகவும் நாட்டுக்கு சேவையாற்ற விமானப்படையில் இணைந்துகொள்ளுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்து சுமார் ஐம்பது இளைஞர்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்ததாகவும் அறிந்துகொண்டேன்.

வடக்கிலும் தெற்கிலும் அமைதியும் வழமைநிலையும் காணப்படுகிறது. விடுதலை புலிகள் மீள்விப்பு என்ற பல்லவி அபகீர்த்திக்குள்ளான தேசியவாத அரசியல் மீதான பிரமையாக மாறிவிடக்கூடாது. ஆனால், வடக்காக இருந்தாலென்ன தெற்காக இருந்தாலென்ன இலங்கைக் குடிமக்கள் சகலரும் சமத்துவமானவர்கள் என்று யதார்த்தபூர்வமாகச் சிந்திக்கக்கூடியவர்களினால் தீர்த்துவைக்கப்படவேண்டிய பல பிரச்சினைகள் இருக்கின்றன எனபதை மனதிற் கொள்ளவேண்டும்.

# காஸாவில் போர் தொடங்கி 6 மாதங்கள் நிறைவு...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

பிடிக்கப்பட்ட நேரத்தில், முறையே 4 வயது மற்றும் 9 மாதங்கள் மட்டுமே ஆகியிருந்தது. இருவரும் இப்போது இவ்வுலகில் இல்லை என்று கூறப்படுகிறது. ஆனால், அவர்களின் மரணம் உறுதி செய்யப்படவில்லை.

**ஹமாஸின் சுரங்கப்பாதை வலையமைப்பு எந்தளவுக்கு அழிக்கப்பட்டது?**

ஹமாஸை அழிப்பதாக உறுதியளித்ததோடு, காஸாவில் பூமிக்கடியில் அக்குழுவினரின் மிகப்பெரிய சுரங்கப்பாதை வலையமைப்பையும் அழிப்பதாக இஸ்ரேல் உறுதியளித்தது.

ஹமாஸ் இந்த சுரங்கப்பாதைகள் வழியாக உணவு மற்றும் மக்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்வது வழக்கம்.

இஸ்ரேல் ராணுவ செய்தித் தொடர்பாளர் ஜொனாதன் கான்ரிகஸ், "காஸா முனையை பொதுமக்களுக்கான ஒரு அடுக்கு என்றும், மற்றொரு அடுக்கு ஹமாஸ் என்றும் நினைத்துக் கொள்ளுங்கள். நாங்கள் ஹமாஸ் உருவாக்கிய அந்த இரண்டாவது அடுக்கை அடைய முயற்சிக்கிறோம்" என கடந்த அக்டோபரில் தெரிவித்தார்.

காஸாவின் சுரங்கப்பாதை வலையமைப்பு சுமார் 500 கிலோமீட்டர் வரை நீண்டுள்ளது என்று ஹமாஸ் முன்னதாக கூறியிருந்தது. இருப்பினும், இந்த தகவலை சுயாதீனமாக சரிபார்க்க வழி இல்லை.

இதுவரை எத்தனை சுரங்கப்பாதைகள் அழிக்கப்பட்டுள்ளன, அவை மொத்த எண்ணிக்கையில் எவ்வளவு என்று இஸ்ரேல் ராணுவத்திடம் கேட்டோம். அதற்கு, "காஸாவில் உள்ள பயங்கரவாதக் கட்டமைப்புகளை பெருமளவில் அழித்துள்ளதாக" இஸ்ரேல் ராணுவம் கூறியுள்ளது.

ஹமாஸ் சுரங்கப்பாதைகள் கண்டுபிடிக்கப்பட்டதற்கான ஆதாரங்களை இஸ்ரேல் ராணுவம் பல சந்தர்ப்பங்களில் வெளியிட்டுள்ளது.

எடுத்துக்காட்டாக, காஸா நகரில் உள்ள அல்-ஷிஃபா மருத்துவமனையின் அடியில் உள்ள சுரங்கப்பாதையின் ஒரு பகுதியின் வீடியோ காட்சிகளை நவம்பரில் இஸ்ரேல் ராணுவம் வெளியிட்டது.



இஸ்ரேல் ராணுவத்தின்படி, அது ஹமாஸின் கட்டளை மையமாக பயன்படுத்தப்பட்டது.

இஸ்ரேல் ராணுவம் இதுவரை எத்தனை நீண்ட சுரங்கப்பாதைகளை கண்டறிந்துள்ளது என்பதை அறிய, காஸாவின் சுரங்கப்பாதைகள் தொடர்பாக அக்டோபர் 7, 2023 மற்றும் மார்ச் 26, 2024 வரை அதன் சமூக ஊடக தளங்களிலும், டெலிகிராமிலும் வெளியிடப்பட்ட செய்திகளை பிபிசி சரிபார்த்தது.

இதில், 198 செய்திகளில், சுரங்கப்பாதைகள் கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பான தகவல்கள் இருந்தன.

மற்றொரு 141 செய்திகள், சுரங்கப்பாதையை அழித்தது அல்லது செயலிழக்கச் செய்தது குறித்துக் கூறுகின்றன.

இந்த செய்திகளில் பெரும்பாலானவை சுரங்கப்பாதைகளின் இருப்பிடம் தொடர்பான துல்லியமான விவரங்களை வழங்கவில்லை. எனவே, இஸ்ரேல் ராணுவம் எத்தனை சுரங்கங்களை கண்டுபிடித்தது அல்லது அழித்தது என்பதை உறுதிப்படுத்த முடியாது.

காஸாவில் பூமிக்கடியில் உள்ள இந்த வலைப்பின்னல் அமைப்பிலான சுரங்கப்பாதை பாதைகளில் வெவ்வேறு அளவுகளில் அறைகள், அத்துடன் சுரங்கப்பாதை மேற்பரப்பை சந்திக்கும் ஒரு புள்ளி உட்பட பல கூறுகளால் ஆனது.

நாங்கள் பகுப்பாய்வு செய்த செய்திகளில், 36 செய்திகள், மொத்தம் 400 சுரங்கவாயிற்குழிகள் மீதான தாக்குதல்களைக் குறிப்பிட்டுள்ளது. இருப்பினும், இஸ்ரேலின் ரீச்மேன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும் சுரங்கப்பாதை வழி போர்களில் நிபுணருமான டாக்டர். டாப்னே ரிச்மண்ட், ஒரு சுரங்கவாயிற்குழியை சுரங்கப்பாதையுடன் ஒன்றாக தொடர்புப்படுத்துவது தவறாக வழிநடத்தும் என்று கூறுகிறார்.

இந்த சுரங்கவாயிற்குழிகளை அழித்த பிறகும் சுரங்கப்பாதை வலையமைப்பு அப்படியே உள்ளது என்று அவர் கூறுகிறார். "இந்தப் போரில் சுரங்கப்பாதைகள் முற்றிலுமாக அழிக்கப்பட்டதாக நான் நினைக்கவில்லை," என்று அவர் கூறினார்.

**பாலத்தீனர்களுக்கு ஏற்பட்ட இழப்பு**

காஸாவில் வாழும் பாலத்தீனர்கள் இஸ்ரேலின் போர் நோக்கங்களுக்காக பெரும் விலை கொடுக்க வேண்டியதாயிற்று.

ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சகத்தின் கூற்றுப்படி, இஸ்ரேலிய தாக்குதல்களில் இதுவரை 33 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாலத்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஏப்ரல் 5 அன்று அமைச்சகம் வெளியிட்ட தரவின் படி, கொல்லப்பட்டவர்களில் 70 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்பதைக் காட்டுகிறது.

ஹமாஸ் இலக்குகளை அழிக்க இஸ்ரேலிய படைகளின் முயற்சிகளுக்கு மத்தியில் பலர் இடம்பெயர்ந்துள்ளனர் அல்லது வீடற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, காஸாவில் உள்ள 17 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குத் தப்பிச் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குடியிருப்புப் பகுதிகள் பாழடைந்து, பரபரப்பாக இருந்த சாலைகள் தற்போது ஒன்றும் இல்லாமல் ஆகியுள்ளன.

கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

அக்டோபர் 7 முதல், காஸாவின் 56 சதவீத கட்டடங்கள் சேதமடைந்துள்ளன அல்லது முற்றிலும் இடிக்கப்பட்டுள்ளன என்று செயற்கைக்கோள் தரவுகளின் பகுப்பாய்வு காட்டுகிறது.

போர் தொடங்கி ஆறு மாதங்களுக்குப் பிறகும், இஸ்ரேல் தனது போர் நோக்கங்களை அடைந்துவிட்டதா இல்லையா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ●

